# நவநாள் செபம்
## முதல் நாள்

### படைப்பின் இறைவன்

**கர்த்தர் கற்பித்த செபம்**

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள்அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும், எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

**தந்தையாம் கடவுளுக்கு அர்ப்பண செபம்**

விண்ணுலகத்தில் இருக்கிற எங்கள் அன்பு பிதாவே, உம்மிடம் வந்து, இன்று எங்களையே உமது அன்புக் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். எங்கள் மனம், உள்ளம், விருப்பங்கள் மற்றும் வாழ்க்கை அனைத்தையும் முழுமையாக உமக்கே அர்ப்பணிக்கிறோம். எங்களை உம்முடைய திருவுளப்படியே நடத்தும். மனுக்குலம் முழுவதும் உம்மை அறியவும், ஆராதிக்கவும், அன்பு செய்யவும் கருவிகளாய் எங்களை பயன்படுத்தும். உமது எல்லையற்ற அன்பை எங்கள் செயல்கள் பறைச்சாற்றட்டும். எங்கள் நாவு உமது புகழ் பாடட்டும். எங்கள் எண்ணங்கள் உம்மால் மட்டுமே தூண்டப்படட்டும். எங்கள் அன்பு பிதாவே, நாங்கள் உம்மை போற்றுகிறோம், வணங்குகிறோம், ஆராதிக்கிறோம், அன்பு செய்கிறோம். ஆமென்.

**அப்பா பிதாவின் பாதுகாப்பு வளையம் செபம்**

அப்பா பிதாவே! பாவிகளாயிருக்கிற எங்கள் மேல் இரக்கமாயிரும். நடுத்தீர்வையின் நாளில் எங்களைக் காத்தருளும். உமது பாதுகாப்பில் எம்மை வைத்தருளும். உமது பாதுகாப்பு வளையத்தினால் சூழ்ந்து எம்மைக் காத்தருளும். (முகம் குப்புற விழுந்து மும்முறை சொல்லவும்)

**படைப்பின் இறைவன்**

“என்றென்றும் வாழும் இறைவனாகிய, நாமே, எனது சொந்த ஆற்றலால் முன்னமே, மனிதர்களை எனது சாயலில் படைக்க எண்ணினேன். ஆனால் மனிதன் உயிர் வாழத் தேவையானவைகளை முதலில் படைக்க வேண்டியிருந்தது. எனவே தான் முதலில் உலகத்தைப் படைத்து, மனிதன் உயிர்வாழத் தேவையானது நீர், நிலம், காற்று, சூரியன், நிலவு போன்ற தேவைகள் அனைத்தையும் படைத்தளித்து, இறுதியாக, படைப்பின் சிகரமான மனிதனை உருவாக்கினேன்”.

**கடவுள் என் தந்தை**

என் விண்ணகத் தந்தையே, நீர் என்னுடைய தந்தை என்பதையும், நான் உம்முடைய பிள்ளை என்பதையும் அறிவது எத்துனை இனிமையானது. எனது ஆன்மீக வானில் இருள் சூழ்ந்திருக்கும்போதும், எனது சிலுவையின் பாரம் என்னை அழுத்தும் போதும், தந்தையே, நீர் என் மீது கொண்டுள்ள அன்பை விசுவசிக்கிறேன் என்று அடிக்கடி சொல்வதின் தேவையை நான் உணர்கிறேன். ஆம் தந்தாய், எனது வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நீர் எனக்கு தந்தையாய் இருக்கிறீர், நான் உமக்கு பிள்ளையாக இருக்கிறேன் என்பதை நான் விசுவசிக்கிறேன். நீர் எல்லையற்ற அன்பினால் என்னை நேசிக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். இரவு பகலாய் என்னை நீர் காத்து வருகிறீர், உமது ஆணையின்றி என் தலையிலிருந்து ஒரு முடி கூட விழுவதில்லை என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஞானத்தால், எனக்கு நன்மையானது எதுவென என்னைவிட மேலாகவே நீர் அறிந்திருக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஆற்றலால் எனக்கு நேரும் தீமையைக்கூட நன்மையாக மாற்ற வல்லவர் என்று விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற நன்மைத்தனத்தால், உம்மை அன்பு செய்பவருக்கு அனைத்தையும் நன்மையாகவே மாற்றுகிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். என்னைத் தாக்க வரும் கரங்களில் கூட உமது குணமளிக்கும் கரங்களையே காண்கிறேன், முத்தி செய்கிறேன். நான் உம்மை விசுவசிக்கிறேன். என் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் அதிகப்படுத்தியருளும்.

எனது வாழ்வின் எல்லா நிகழ்வுகளையும் உமது அன்பே வழிநடத்துகிறது என்பதை நான் கண்டுணரச் செய்யும். தன் தாயின் கரங்களில் தன்னை முழுவதும் அர்ப்பணிக்கும் ஒரு குழந்தை போல என்னை முழுவதும் உம்மிடம் அர்ப்பணிக்க

எனக்கு கற்பித்தருளும். தந்தையே! நீர் அனைத்தையும் அறிகிறீர், அனைத்தையும் காண்கிறீர். நான் என்னை அறிவதை விட நீர் என்னை நன்றாக அறிந்துள்ளீர். நீர் அனைத்தையும் செய்யும் ஆற்றல் கொண்டு என்னை அன்பு செய்கிறீர். தந்தையே, நான் எப்போதும் உம்மையே நாடி வரவேண்டுமென நீர் விரும்புவதால், நம்பிக்கையுடன் உம் திருமகன் இயேசுவோடும், அன்னை மரியாளோடும் உம்மை நாடி வந்து உம்மிடம் நான் கேட்கும் மன்றாட்டு என்னவென்றால். (உங்கள் தனிப்பட்ட மன்றாட்டை இங்கு கூறவும்). இம்மன்றாட்டை இயேசுவின் திருஇருதயத்தோடும், மரியாளின் மாசற்ற இதயத்தோடும் இணைத்து என்னையும், என் செபங்களையும், தியாகச்செயல்களையும், துன்பங்களையும், கடமையுணர்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். தூய ஆவியின் ஒளியையும், அருளையும், ஆற்றலையும் எனக்குத் தாரும். உமது பரிசுத்த ஆவியால் என்னை உறுதிப்படுத்தியருளும். அதனால் நான் அவரை ஒருபோதும் இழக்காதிருக்கவும், அவரை மனம் நோகச் செய்யாதிருக்கவும், அவரை என்னில் வலுவிழக்கச் செய்யாதிருக்கவும், வரம் தந்தருளுமாறு உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நான் மன்றாடுகிறேன். ஆண்டவராகிய இயேசுவே, உம் இதயத்தை திறந்து அதில் என் இதயத்தை வைத்து, மரியாளின் மாசற்ற இதயத்தோடு அதை இறைத்தந்தைக்கு அர்ப்பணித்தருளும். எனக்குத் தேவையான அருளைப் பெற்றுத்தாரும். வானகத் தந்தையே, எல்லா மனிதரையும் உம்மிடம் அழைத்துக் கொள்ளும். உமது தந்தைக்குரிய இரக்கத்தையும், தெய்வீக கருணையையும், உலகமெல்லாம் அறிக்கையிட செய்தருளும்.

என் மீது கனிவுள்ள ஒரு தந்தையாய் நான் செல்லுமிடமெல்லாம் கண்ணின் மணி போல என்னை காத்தருளும். என்னை உமக்கு உகந்த மகனாக / மகளாக மாற்றியருளும். என் மீது இரக்கம் வையும். தந்தையே இறைவா, எங்கள் ஆன்மாக்களின் இனிமையான நம்பிக்கையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச் செய்தருளும். தந்தையே இறைவா, மக்களினத்தார் மீது பொழியப்படும் அளவற்ற நன்மையின் வடிவமே. மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். தந்தையே இறைவா, மனுக்குலத்தின் மீது பெய்யும் கருணை மழையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். ஆமென்.

**விவிலிய வாசகம்**
**தொடக்க நூல் 1:1-31, 2:1-4**

தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. அப்பொது கடவுள், “ஒளி தோன்றுக!” என்றார்; ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார். கடவுள் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார். கடவுள் ஒளிக்குப் பகல் என்றும் இருளுக்கு இரவு என்றும் பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று முதல் நாள் முடிந்தது. அப்பொழுது கடவுள், “நீர்த்திரளுக்கு இடையில், வானம் தோன்றுக! அது நீரினின்று நீரைப் பிரிக்கட்டும்” என்றார். கடவுள் வானத்தை உருவாக்கி வானத்திற்குக் கீழுள்ள நீரையும் வானத்திற்கு மேலுள்ள நீரையும் பிரித்தார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் வானத்திற்கு “விண்ணுலகம் என்று பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று இரண்டாம் நாள் முடிந்தது. அப்பொழுது கடவுள், “விண்ணுலகுக்குக் கீழுள்ள நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றுசேர உலர்ந்த தரை தோன்றுக!” என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் உலர்ந்த தரைக்கு நிலம் என்றும் ஒன்றுதிரண்ட நீருக்குக் கடல் என்றும் பெயரிட்டார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

அப்பொழுது கடவுள், “புற்பூண்டுகளையும் விதை தரும் செடிகளையும், கனி தரும் பழமரங்களையும் அந்த அந்த இனத்தின்படியே நிலம் விளைவிக்கட்டும்” என்றார். அது அவ்வாறே ஆயிற்று. புற்பூண்டுகளையும் விதையைப் பிறப்பிக்கும் செடிகளையும் கனிதரும் மரங்களையும் அந்த அந்த இனத்தின்படி நிலம் விளைவித்தது. கடவுள் அது நல்லது என்று கண்டார். மாலையும், காலையும் நிறைவுற்று மூன்றாம் நாள் முடிந்தது. அப்பொழுது கடவுள், “பகலையும் இரவையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் காலங்கள், நாள்கள், ஆண்டுகள் ஆகியவற்றைக் குறிப்பதற்கும் விண்விரிவினில் ஒளிப்பிழம்புகள் தோன்றுக!

அவை மண்ணுலகிற்கு ஒளிதர விண்விரிவினில் ஒளிப்பிழம்புகளாக இருக்கட்டும்” என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் இருபெரும் ஒளிப்பிழம்புகளை உருவாக்கினார். பகலை ஆள்வதற்குப் பெரிய ஒளிப்பிழம்பையும், இரவை ஆள்வதற்குச் சிறிய ஒளிப்பிழம்பையும் மற்றும் விண்மீன்களையும் அவர் உருவாக்கினார். கடவுள் மண்ணுலகிற்கு ஒளிதர விண்ணுலக வானத்தில் அவற்றை

அமைத்தார்; பகலையும் இரவையும் ஆள்வதற்கும் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் அவற்றை அமைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார். மாலையும் காலையும் நிறைவுற்று நான்காம் நாள் முடிந்தது. அப்பொழுது கடவுள், "திரளான உயிரினங்களைத் தண்ணீர் தோற்றுவிப்பதாக! விண்ணுலக வானத்தில் நிலத்திற்கு மேலே பறவைகள் பறப்பனவாக!" என்றார்.

இவ்வாறு, கடலின் பெரும் பாம்புகளையும், திரள் திரளாக நீரில் நீந்திவாழும் உயிரினங்களையும், இறக்கையுள்ள எல்லாவிதப் பறவைகளையும் அவ்வவற்றின் இனத்தின்படி கடவுள் படைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார். கடவுள் அவற்றிற்கு ஆசி வழங்கி "பலுகிப் பெருகிக் கடல் நீரை நிரப்புங்கள். பறவைகளும் மண்ணுலகில் பெருகட்டும்" என்றுரைத்தார். மாலையும் காலையும் நிறைவுற்று, ஐந்தாம் நாள் முடிந்தது. அப்பொழுது கடவுள், "கால்நடைகள், ஊர்வன, காட்டுவிலங்குகள் ஆகியவற்றை அவ்வவற்றின் இனத்தின்படி நிலம் தோற்றுவிப்பதாக" என்றார். கடவுள் காட்டு விலங்குகளையும் கால்நடைகளையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் அவ்வவற்றின் இனத்தின்படி உருவாக்கினார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

அப்பொழுது கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" என்றார். கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார். அப்பொழுது கடவுள், "மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன். இவை உங்களுக்கு உணவாகட்டும்.

எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம் நாள் முடிந்தது.

விண்ணுலகும் மண்ணுலகும் அவற்றில் உள்ள அமைப்புகள் அனைத்தும் உருவாக்கப் பெற்று நிறைவெய்தின. மேலும் கடவுள் தாம் செய்த வேலையை ஏழாம் நாளில் முடித்திருந்தார். அவர் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச்செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசி வழங்கி, அதைப் புனிதப்படுத்தினார். ஏனெனில் கடவுள் தாம் செய்த படைப்பு வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச் செய்து அந்நாளில்தான் ஓய்ந்திருந்தார். இவையே விண்ணுலக, மண்ணுலகப் படைப்பின் தோற்ற முறைமையாம்.

**முதல் நாளுக்கான நவநாள் செபம்**

என் அன்பான தந்தையே இறைவா, நான் வாழும் இந்த உலகிற்காகவும், அதில் நிறைந்துள்ள உமது அழகிய, பயனுள்ள இனிமையான படைப்புகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். நீர் தந்த உயிர்கொடையாகிய என் வாழ்வுக்காக, என் உடல், பொருள், ஆன்மா, இதயம், அவற்றின் இயக்கங்களுக்காவும், எனது சொல், செயல், சிந்தனை மற்றும் உம்மை அன்பு செய்யும் ஆற்றல் ஆகிய அனைத்தையும் நினைத்து நன்றி செலுத்துகிறேன். நான் மகிழ்வுடன் பயன்படுத்துவதற்காக நீர் தந்துள்ள அனைத்து பொருட்களுக்காகவும், என் செயல்பாடுகளுக்காகவும், என்னை நேசிக்கும் அனைத்து மனிதர்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். இந்த அழகிய உலகின் மாண்பினைக் கெடுக்கும் எந்த செயலிலும் நான் ஈடுபடாமல் இருக்கவும், எந்த ஒரு மனிதரும் என்னால் துயரம் அடையாமல் இருக்கவும் எனக்கு உதவியருளும்.

இந்த பூமியின் அழகையும், மாண்பையும் என் செயல்களால் நான் உயர்த்தவும், இவ்வுலகின் மகிழ்ச்சி என் மூலமாக அதிகரிக்கவும் எனக்கு உதவியருளும். நீர் படைத்த இவ்வுலகின் மாண்புக்கு ஏற்றபடி நான் பொறுப்புடன் செயல்படவும், நீர் அளிக்கும் எல்லா வாய்ப்புகளிலும், சிந்தித்து செயல்படவும், ஆக்கப்பூர்வமாக செயல்படவும், அழிவுக்குரிய எதிலும் ஈடுபடாமலும் இருக்க எனக்கு உதவியருளும். எனது நேரத்தையும், என் வாழ்க்கையையும் விவேகத்துடன் பயன்படுத்தி, நான் இவ்வுலகிற்கு பயனுள்ளவனாய் வாழ துணைபுரியும். இந்த மன்றாட்டுக்கள் அனைத்தையும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாகவே உம்மிடம் செபிக்கிறேன்.ஆமென்.

**நன்றி செபம்**

இரக்கமே உருவான எம் விண்ணகத் தந்தையே இறைவா, நன்றி கூறி உம்மைத் துதித்துப் போற்றி, செபத்தில் உம்மோடு நேரம் செலவிடும் இந்த வாய்ப்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிடைத்தற்கரிய எம் வாழ்வினை கொடையாகத் தந்ததை நினைத்து நன்றி கூறுகிறோம். எமது குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் உமது அன்பையும், இரக்கத்தையும் தொடர்ந்து பிரதிபலிக்கும் அனைத்து மக்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். எம் ஒவ்வொருவரையும் அளவற்ற விதத்தில் அன்பு செய்யும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். தந்தையே இறைவா, உமது அன்புதான் எமது நம்பிக்கை. உமது நிறைவான அன்புதான், தீயோனாகிய சாத்தானின் கொடிய துன்பங்களிலிருந்து எம்மை காப்பாற்றுகிறது. எம்மில் ஏராளமானோரின் இதயங்களை உமது அளவற்ற இரக்கத்தால் தொட்டு மகிழ்ச்சியில் மனம் நெகிழச் செய்கின்றீர் என்பதை உணர்ந்து உமக்கு நன்றி கூறுகிறோம். வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு உலகத்தின் கொடூரமாக பாவ சார்புள்ள தாக்குதல்களினால் இறுகிப்போன எமது கடின இதயங்களை மாற்றி, உம்மீது கொண்டுள்ள அன்பினால் பற்றி எரியச் செய்வதற்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். அன்பிற்கினிய நல்ல தந்தையே இறைவா! எம் ஒவ்வொருவர் மீதும் நீர் காட்டும் கனிவான அன்பை நினைத்து உமக்கு நன்றி கூறுகிறோம்.

அன்பான எம் தந்தையே இறைவா, கனிவோடு எம்மைப் பாதுகாத்தருளும். உமது பாதுகாப்பான அன்புக் கரங்களுக்குள் எம்மை வைத்து, நாங்கள் உமது கரங்களில் பாதுகாப்பை உணரச் செய்யும். எங்களின் அன்பான இனிய தந்தையே, எங்கள் செபங்களையும், விண்ணப்பங்களையும் தயவுடன் கேட்டு அருள் புரிந்து, எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவதற்காக உமக்கு மீண்டும் நன்றி கூறுகிறோம். நாங்கள் உம்மை எப்பொழுதும், துதித்து புகழ்ந்து நன்றி கூறுவதிலிருந்து மனம் மாற விடாதேயும், எப்பொழும் உமது அன்பு நாங்கள் எங்கு சென்றாலும் எம்மைத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது என்பதையும், எங்கள் துன்ப வேளைகளில் உமது அன்பு எப்போது ஆறுதலாய் இருக்கிறதென்றம் உணரச் செய்தருளும்.

என் அன்பான தந்தையே, படைப்பின் தேவனே, உம்மைப் புகழ்கின்றோம். உம்மை ஆராதித்து துதிக்கிறோம். உம்மை அன்பு செய்கிறோம். உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

இரக்கத்தின் ஆண்டவராகிய இயேசுவே, விண்ணகத் தந்தையின் ஒரே திருமகனே, உம்மைப் போற்றுகிறோம். உம்மைப் புகழ்கின்றோம், உம்மை துதித்து ஆராதிக்கின்றோம். உமக்கு நன்றி கூறுகின்றோம். உம்மை முழு மனதோடு அன்பு செய்கிறோம்.

எம்மை அர்ச்சித்து புனிதப்படுத்திவழி நடத்துபவரான தூய ஆவியானவரே, உம்மைப் போற்றுகிறோம், புகழ்க்ன்றோம், வாழ்த்துகின்றோம். உம்மை ஆராதிக்கின்றோம், உம்மை அன்பு செய்து நன்றி செலுத்துகின்றோம்.

மாசற்ற கன்னி மரியே, இயேசு கிறிஸ்துவின் அன்பு அன்னையே, எங்கள் ஒவ்வொருவரின் நல்வாழ்வுக்காக பரிந்து பேசும் அன்பு அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

இறைவனின் அனைத்து புனிதர்களே, வானதூதர்களே எமக்காக வேண்டிக் கொள்ளுங்கள். – ஆமென்.

## இரண்டாம் நாள்

## விண்ணகத் தந்தையாம் இறைவனின் திருமுகம்

### கர்த்தர் கற்பித்த செபம்

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள்அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும், எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து
எங்களை விடுவித்தருளும். ஆமென்.

### தந்தையாம் கடவுளுக்கு அர்ப்பண செபம்

விண்ணுலகத்தில் இருக்கிற எங்கள் அன்பு பிதாவே, உம்மிடம் வந்து, இன்று எங்களையே உமது அன்புக் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். எங்கள் மனம், உள்ளம், விருப்பங்கள் மற்றும் வாழ்க்கை அனைத்தையும் முழுமையாக உமக்கே அர்ப்பணிக்கிறோம். எங்களை உம்முடைய திருவுளப்படியே நடத்தும். மனுக்குலம் முழுவதும் உம்மை அறியவும், ஆராதிக்கவும், அன்பு செய்யவும் கருவிகளாய் எங்களை பயன்படுத்தும். உமது எல்லையற்ற அன்பை எங்கள் செயல்கள் பறைச்சாற்றட்டும். எங்கள் நாவு உமது புகழ் பாடட்டும். எங்கள் எண்ணங்கள் உம்மால் மட்டுமே தூண்டப்படட்டும். எங்கள் அன்பு பிதாவே, நாங்கள் உம்மை போற்றுகிறோம், வணங்குகிறோம், ஆராதிக்கிறோம், அன்பு செய்கிறோம். ஆமென்.

### அப்பா பிதாவின் பாதுகாப்பு வளையம் செபம்

அப்பா பிதாவே! பாவிகளாயிருக்கிற எங்கள் மேல் இரக்கமாயிரும். நடுத்தீர்வையின் நாளில் எங்களைக் காத்தருளும். உமது பாதுகாப்பில் எம்மை வைத்தருளும். உமது பாதுகாப்பு வளையத்தினால் சூழ்ந்து எம்மைக் காத்தருளும். (முகம் குப்புற விழுந்து மும்முறை சொல்லவும்)

### விண்ணகத் தந்தையாம் இறைவனின் திருமுகம்

“என் அன்பு மகன் இயேசு என்னுள்ளும், நான் அவருள்ளும், எங்கள் இருவருக்குமிடையே பரிமாறிக் கொள்ளும் அன்பாகிய தூய ஆவியார் எங்களை ஒன்றாய் இணைப்பதன் மூலம் நாங்கள் ஒரே இறைவனாய் இருக்கிறோம்”.

**கடவுள் என் தந்தை**

என் விண்ணகத் தந்தையே, நீர் என்னுடைய தந்தை என்பதையும், நான் உம்முடைய பிள்ளை என்பதையும் அறிவது எத்துனை இனிமையானது. எனது ஆன்மீக வானில் இருள் சூழ்ந்திருக்கும்போதும், எனது சிலுவையின் பாரம் என்னை அழுத்தும் போதும், தந்தையே, நீர் என் மீது கொண்டுள்ள அன்பை விசுவசிக்கிறேன் என்று அடிக்கடி சொல்வதின் தேவையை நான் உணர்கிறேன். ஆம் தந்தாய், எனது வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நீர் எனக்கு தந்தையாய் இருக்கிறீர், நான் உமக்கு பிள்ளையாக இருக்கிறேன் என்பதை நான் விசுவசிக்கிறேன். நீர் எல்லையற்ற அன்பினால் என்னை நேசிக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். இரவு பகலாய் என்னை நீர் காத்து வருகிறீர், உமது ஆணையின்றி என் தலையிலிருந்து ஒரு முடி கூட விழுவதில்லை என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஞானத்தால், எனக்கு நன்மையானது எதுவென என்னைவிட மேலாகவே நீர் அறிந்திருக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஆற்றலால் எனக்கு நேரும் தீமையைக்கூட நன்மையாக மாற்ற வல்லவர் என்று விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற நன்மைத்தனத்தால், உம்மை அன்பு செய்பவருக்கு அனைத்தையும் நன்மையாகவே மாற்றுகிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். என்னைத் தாக்க வரும் கரங்களில் கூட உமது குணமளிக்கும் கரங்களையே காண்கிறேன், முத்தி செய்கிறேன். நான் உம்மை விசுவசிக்கிறேன். என் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் அதிகப்படுத்தியருளும்.

எனது வாழ்வின் எல்லா நிகழ்வுகளையும் உமது அன்பே வழிநடத்துகிறது என்பதை நான் கண்டுணரச் செய்யும். தன் தாயின் கரங்களில் தன்னை முழுவதும் அர்ப்பணிக்கும் ஒரு குழந்தை போல என்னை முழுவதும் உம்மிடம் அர்ப்பணிக்க எனக்கு கற்பித்தருளும். தந்தையே! நீர் அனைத்தையும் அறிகிறீர், அனைத்தையும் காண்கிறீர். நான் என்னை அறிவதை விட நீர் என்னை நன்றாக அறிந்துள்ளீர். நீர் அனைத்தையும் செய்யும் ஆற்றல் கொண்டு என்னை அன்பு செய்கிறீர். தந்தையே, நான் எப்போதும் உம்மையே நாடி வரவேண்டுமென நீர் விரும்புவதால், நம்பிக்கையுடன் உம் திருமகன் இயேசுவோடும், அன்னை மரியாளோடும் உம்மை நாடி வந்து உம்மிடம் நான்

கேட்கும் மன்றாட்டு என்னவென்றால். (உங்கள் தனிப்பட்ட மன்றாட்டை இங்கு கூறவும்). இம்மன்றாட்டை இயேசுவின் திருஇருதயத்தோடும், மரியாளின் மாசற்ற இதயத்தோடும் இணைத்து என்னையும், என் செபங்களையும், தியாகச்செயல்களையும், துன்பங்களையும், கடமையுணர்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். தூய ஆவியின் ஒளியையும், அருளையும், ஆற்றலையும் எனக்குத் தாரும். உமது பரிசுத்த ஆவியால் என்னை உறுதிப்படுத்தியருளும். அதனால் நான் அவரை ஒருபோதும் இழக்காதிருக்கவும், அவரை மனம் நோகச் செய்யாதிருக்கவும், அவரை என்னில் வலுவிழக்கச் செய்யாதிருக்கவும், வரம் தந்தருளுமாறு உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நான் மன்றாடுகிறேன். ஆண்டவராகிய இயேசுவே, உம் இதயத்தை திறந்து அதில் என் இதயத்தை வைத்து, மரியாளின் மாசற்ற இதயத்தோடு அதை இறைத்தந்தைக்கு அர்ப்பணித்தருளும். எனக்குத் தேவையான அருளைப் பெற்றுத்தாரும். வானகத் தந்தையே, எல்லா மனிதரையும் உம்மிடம் அழைத்துக் கொள்ளும். உமது தந்தைக்குரிய இரக்கத்தையும், தெய்வீக கருணையையும், உலகமெல்லாம் அறிக்கையிட செய்தருளும்.

என் மீது கனிவுள்ள ஒரு தந்தையாய் நான் செல்லுமிடமெல்லாம் கண்ணின் மணி போல என்னை காத்தருளும். என்னை உமக்கு உகந்த மகனாக / மகளாக மாற்றியருளும். என் மீது இரக்கம் வையும். தந்தையே இறைவா, எங்கள் ஆன்மாக்களின் இனிமையான நம்பிக்கையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச் செய்தருளும். தந்தையே இறைவா, மக்களினத்தார் மீது பொழியப்படும் அளவற்ற நன்மையின் வடிவமே. மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். தந்தையே இறைவா, மனுக்குலத்தின் மீது பெய்யும் கருணை மழையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். ஆமென்.

**விவிலிய வாசகம்**
**யோவான் 14:5-14**

தோமா அவரிடம், "ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்து கொள்ள இயலும்?" என்றார். இயேசு அவரிடம், "வழியும் உண்மையும் வாழ்வும்

நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. "நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இது முதல் நீங்கள் தந்தையை அறிந்திருக்கிறீர்கள். அவரைக் கண்டுமிருக்கிறீர்கள்" என்றார். அப்போது பிலிப்பு அவரிடம், "ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக் காட்டும்; அதுவே போதும்" என்றார்.

இயேசு அவரிடம் கூறியது: "பிலிப்பே, இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்துகொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும். அப்படியிருக்க, "தந்தையை எங்களுக்குக் காட்டும்" என்று நீ எப்படிக் கேட்கலாம்?

நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்புவதில்லையா? நான் உங்களுக்குக் கூறியவற்றை நானாகக் கூறவில்லை. என்னுள் இருந்துகொண்டு செயலாற்றுபவர் தந்தையே. நான் தந்தையுள் இருக்கிறேன்; தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள்; என் வார்த்தையின் பொருட்டு நம்பாவிட்டால் என் செயல்களின் பொருட்டாவது நம்புங்கள். நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார்; ஏன், அவற்றைவிடப் பெரியவற்றையும் செய்வார். ஏனெனில் நான் தந்தையிடம் போகிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன். இவ்வாறு தந்தை மகன் வழியாய் மாட்சி பெறுவார். நீங்கள் என் பெயரால் எதை கேட்டாலும் செய்வேன்.

**இரண்டாம் நாளுக்குரிய செபம்**

தந்தையாகிய இறைவா, உமது அன்பே உருவான ஆச்சரியத்துக்குரிய, மகிமை நிறைந்த, ஆராதனைக்குரிய, இரக்கமும் கருணையும் தவழும் உம் திருமுக தரிசனத்துக்காக ஆசை, ஆசையாய், ஏங்குகிறோம். நீர் மாட்சிமையின் மொத்த வடிவமாய் இருக்கிறீர். ஆயிரமாயிரம் கதிரவன்கள் ஒன்று சேர்ந்து கொடுக்கும் ஒளியை விட பன்மடங்கு உம் திருமுகம் பிரகாசமாய் ஒளி வீசுகிறதே. உமது அளவற்ற அன்பின் ஒளியால், எம் ஆன்மாக்களின் இருளைப் போக்கி எம்மை ஒளிரச் செய்கிறீர். இரக்கமே உருவான, என்றும் வாழும் தந்தையே, இவ்வுலகில் உமது தெய்வீக அன்பினை பிரதிபலிக்கும் உயிருள்ள சாட்சிகளாய் எம்மை உருமாற்றும். எமது வாழ்வில் இனி எம்மை சந்திக்கும் ஒவ்வொருவரும் எம்மில் உம்மையே காணச் செய்தருளும். எமக்குத் தேவையான அருள் வரங்களைத் தந்து, தீயோனிடமிருந்தும், தீய சக்திகளின்

தாக்குதல்களில் இருந்தும் எம்மைப் பாதுகாத்து காப்பாற்றும். எமது கேடயமாய் இருந்தருளும்.

– ஆமென்.

**நன்றி செபம்**

இரக்கமே உருவான எம் விண்ணகத் தந்தையே இறைவா, நன்றி கூறி உம்மைத் துதித்துப் போற்றி, செபத்தில் உம்மோடு நேரம் செலவிடும் இந்த வாய்ப்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிடைத்தற்கரிய எம் வாழ்வினை கொடையாகத் தந்ததை நினைத்து நன்றி கூறுகிறோம். எமது குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் உமது அன்பையும், இரக்கத்தையும் தொடர்ந்து பிரதிபலிக்கும் அனைத்து மக்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். எம் ஒவ்வொருவரையும் அளவற்ற விதத்தில் அன்பு செய்யும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். தந்தையே இறைவா, உமது அன்புதான் எமது நம்பிக்கை. உமது நிறைவான அன்புதான், தீயோனாகிய சாத்தானின் கொடிய துன்பங்களிலிருந்து எம்மை காப்பாற்றுகிறது. எம்மில் ஏராளமானோரின் இதயங்களை உமது அளவற்ற இரக்கத்தால் தொட்டு மகிழ்ச்சியில் மனம் நெகிழச் செய்கின்றீர் என்பதை உணர்ந்து உமக்கு நன்றி கூறுகிறோம். வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு உலகத்தின் கொடூரமாக பாவ சார்புள்ள தாக்குதல்களினால் இறுகிப்போன எமது கடின இதயங்களை மாற்றி, உம்மீது கொண்டுள்ள அன்பினால் பற்றி எரியச் செய்வதற்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். அன்பிற்கினிய நல்ல தந்தையே இறைவா! எம் ஒவ்வொருவர் மீதும் நீர் காட்டும் கனிவான அன்பை நினைத்து உமக்கு நன்றி கூறுகிறோம்.

அன்பான எம் தந்தையே இறைவா, கனிவோடு எம்மைப் பாதுகாத்தருளும். உமது பாதுகாப்பான அன்புக் கரங்களுக்குள் எம்மை வைத்து, நாங்கள் உமது கரங்களில் பாதுகாப்பை உணரச் செய்யும். எங்களின் அன்பான இனிய தந்தையே, எங்கள் செபங்களையும், விண்ணப்பங்களையும் தயவுடன் கேட்டு அருள் புரிந்து, எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவதற்காக உமக்கு மீண்டும் நன்றி கூறுகிறோம். நாங்கள் உம்மை எப்பொழுதும், துதித்து புகழ்ந்து நன்றி கூறுவதிலிருந்து மனம் மாற விடாதேயும், எப்பொழும் உமது அன்பு நாங்கள் எங்கு சென்றாலும் எம்மைத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது என்பதையும், எங்கள் துன்ப வேளைகளில் உமது அன்பு எப்போது ஆறுதலாய் இருக்கிறதென்றம் உணரச் செய்தருளும்.

என் அன்பான தந்தையே, படைப்பின் தேவனே, உம்மைப் புகழ்கின்றோம். உம்மை ஆராதித்து துதிக்கிறோம். உம்மை அன்பு செய்கிறோம். உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

இரக்கத்தின் ஆண்டவராகிய இயேசுவே, விண்ணகத் தந்தையின் ஒரே திருமகனே, உம்மைப் போற்றுகிறோம். உம்மைப் புகழ்கின்றோம், உம்மை துதித்து ஆராதிக்கின்றோம். உமக்கு நன்றி கூறுகின்றோம். உம்மை முழு மனதோடு அன்பு செய்கிறோம்.

எம்மை அர்ச்சித்து புனிதப்படுத்திவழி நடத்துபவரான தூய ஆவியானவரே, உம்மைப் போற்றுகிறோம், புகழ்க்ன்றோம், வாழ்த்துகின்றோம். உம்மை ஆராதிக்கின்றோம், உம்மை அன்பு செய்து நன்றி செலுத்துகின்றோம்.

மாசற்ற கன்னி மரியே, இயேசு கிறிஸ்துவின் அன்பு அன்னையே, எங்கள் ஒவ்வொருவரின் நல்வாழ்வுக்காக பரிந்து பேசும் அன்பு அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

இறைவனின் அனைத்து புனிதர்களே, வானதூதர்களே எமக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

– ஆமென்.

## மூன்றாம் நாள்

## நம்மை நல்வழிப்படுத்தும் தந்தையாகிய இறைவன்

### கர்த்தர் கற்பித்த செபம்

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள்அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும், எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து
எங்களை விடுவித்தருளும். ஆமென்.

### தந்தையாம் கடவுளுக்கு அர்ப்பண செபம்

விண்ணுலகத்தில் இருக்கிற எங்கள் அன்பு பிதாவே, உம்மிடம் வந்து, இன்று எங்களையே உமது அன்புக் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். எங்கள் மனம், உள்ளம், விருப்பங்கள் மற்றும் வாழ்க்கை அனைத்தையும் முழுமையாக உமக்கே அர்ப்பணிக்கிறோம். எங்களை உம்முடைய திருவுளப்படியே நடத்தும். மனுக்குலம் முழுவதும் உம்மை அறியவும், ஆராதிக்கவும், அன்பு செய்யவும் கருவிகளாய் எங்களை பயன்படுத்தும். உமது எல்லையற்ற அன்பை எங்கள் செயல்கள் பறைச்சாற்றட்டும். எங்கள் நாவு உமது புகழ் பாடட்டும். எங்கள் எண்ணங்கள் உம்மால் மட்டுமே தூண்டப்படட்டும். எங்கள் அன்பு பிதாவே, நாங்கள் உம்மை போற்றுகிறோம், வணங்குகிறோம், ஆராதிக்கிறோம், அன்பு செய்கிறோம். ஆமென்.

### அப்பா பிதாவின் பாதுகாப்பு வளையம் செபம்

அப்பா பிதாவே! பாவிகளாயிருக்கிற எங்கள் மேல் இரக்கமாயிரும். நடுத்தீர்வையின் நாளில் எங்களைக் காத்தருளும். உமது பாதுகாப்பில் எம்மை வைத்தருளும். உமது பாதுகாப்பு வளையத்தினால் சூழ்ந்து எம்மைக் காத்தருளும். (முகம் குப்புற விழுந்து மும்முறை சொல்லவும்)

**நம்மை நல்வழிப்படுத்தும் தந்தையாகிய இறைவன்**

“இப்பூமியில் தீமை எந்த அளவுக்கு பெருகியதோ அதற்குப் பன்மடங்காக, என் நன்மைத்தனம், நேரிய மனம் கொண்ட உள்ளங்களைத் தேடிச்சென்று அவர்களின் மூலமாக, அழிவையும் தீமையையும் உருவாக்குவோரை உருமாற்ற என் கட்டளைகளை அளித்தேன். தீமை செய்வோர் மீது சில சமயங்களில் நான் மிகவும் கடுமையாக இருந்தது அவர்களைத் தண்டிப்பதற்காக என்பதைவிட, அவர்கள் மனம் திருந்தி வரவேண்டும் என்பதற்காகவேதான். ஆம், அவர்கள் தங்கள் நன்றி கெட்டத்தனத்தால் அவர்களைப் படைத்து பாதுகாத்து வரும் தந்தையாகிய என்னையே தங்கள் தீமைகளினால் மறந்துவிட்டார்கள். அவர்கள் தங்கள் தீய வழிகளைவிட்டு மீண்டும் தந்தையாகிய என்னிடம் வரவேண்டும் என்பதே என் விருப்பம். ஆனால் மீண்டும் அவர்கள் தீய வழிகளிலும், பாவத்திலும் அளவு கடந்து செல்லும்போது, இயற்கையின் சீற்றத்தினால் அவர்கள் மீது பேரழிவுகளையும், துன்பங்களையும், உயிரிழப்புகளையும் அனுப்பி அவர்களைத் தூய்மைப்படுத்தி நல்வழிப்படுத்தவும் வேண்டியதாயிற்று”.

**கடவுள் என் தந்தை**

என் விண்ணகத் தந்தையே, நீர் என்னுடைய தந்தை என்பதையும், நான் உம்முடைய பிள்ளை என்பதையும் அறிவது எத்துனை இனிமையானது. எனது ஆன்மீக வானில் இருள் சூழ்ந்திருக்கும்போதும், எனது சிலுவையின் பாரம் என்னை அழுத்தும் போதும், தந்தையே, நீர் என் மீது கொண்டுள்ள அன்பை விசுவசிக்கிறேன் என்று அடிக்கடி சொல்வதின் தேவையை நான் உணர்கிறேன். ஆம் தந்தாய், எனது வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நீர் எனக்கு தந்தையாய் இருக்கிறீர், நான் உமக்கு பிள்ளையாக இருக்கிறேன் என்பதை நான் விசுவசிக்கிறேன். நீர் எல்லையற்ற அன்பினால் என்னை நேசிக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். இரவு பகலாய் என்னை நீர் காத்து வருகிறீர், உமது ஆணையின்றி என் தலையிலிருந்து ஒரு முடி கூட விழுவதில்லை என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஞானத்தால், எனக்கு நன்மையானது எதுவென என்னைவிட மேலாகவே நீர் அறிந்திருக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஆற்றலால் எனக்கு நேரும் தீமையைக்கூட நன்மையாக மாற்ற வல்லவர் என்று விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற நன்மைத்தனத்தால், உம்மை அன்பு செய்பவருக்கு அனைத்தையும் நன்மையாகவே மாற்றுகிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். என்னைத் தாக்க வரும் கரங்களில் கூட உமது குணமளிக்கும்

கரங்களையே காண்கிறேன், முத்தி செய்கிறேன். நான் உம்மை விசுவசிக்கிறேன். என் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் அதிகப்படுத்தியருளும்.

எனது வாழ்வின் எல்லா நிகழ்வுகளையும் உமது அன்பே வழிநடத்துகிறது என்பதை நான் கண்டுணரச் செய்யும். தன் தாயின் கரங்களில் தன்னை முழுவதும் அர்ப்பணிக்கும் ஒரு குழந்தை போல என்னை முழுவதும் உம்மிடம் அர்ப்பணிக்க எனக்கு கற்பித்தருளும். தந்தையே! நீர் அனைத்தையும் அறிகிறீர், அனைத்தையும் காண்கிறீர். நான் என்னை அறிவதை விட நீர் என்னை நன்றாக அறிந்துள்ளீர். நீர் அனைத்தையும் செய்யும் ஆற்றல் கொண்டு என்னை அன்பு செய்கிறீர். தந்தையே, நான் எப்போதும் உம்மையே நாடி வரவேண்டுமென நீர் விரும்புவதால், நம்பிக்கையுடன் உம் திருமகன் இயேசுவோடும், அன்னை மரியாளோடும் உம்மை நாடி வந்து உம்மிடம் நான் கேட்கும் மன்றாட்டு என்னவென்றால். (உங்கள் தனிப்பட்ட மன்றாட்டை இங்கு கூறவும்). இம்மன்றாட்டை இயேசுவின் திருஇருதயத்தோடும், மரியாளின் மாசற்ற இதயத்தோடும் இணைத்து என்னையும், என் செபங்களையும், தியாகச்செயல்களையும், துன்பங்களையும், கடமையுணர்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். தூய ஆவியின் ஒளியையும், அருளையும், ஆற்றலையும் எனக்குத் தாரும். உமது பரிசுத்த ஆவியால் என்னை உறுதிப்படுத்தியருளும். அதனால் நான் அவரை ஒருபோதும் இழக்காதிருக்கவும், அவரை மனம் நோகச் செய்யாதிருக்கவும், அவரை என்னில் வலுவிழக்கச் செய்யாதிருக்கவும், வரம் தந்தருளுமாறு உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நான் மன்றாடுகிறேன். ஆண்டவராகிய இயேசுவே, உம் இதயத்தை திறந்து அதில் என் இதயத்தை வைத்து, மரியாளின் மாசற்ற இதயத்தோடு அதை இறைத்தந்தைக்கு அர்ப்பணித்தருளும். எனக்குத் தேவையான அருளைப் பெற்றுத்தாரும். வானகத் தந்தையே, எல்லா மனிதரையும் உம்மிடம் அழைத்துக் கொள்ளும். உமது தந்தைக்குரிய இரக்கத்தையும், தெய்வீக கருணையையும், உலகமெல்லாம் அறிக்கையிட செய்தருளும்.

என் மீது கனிவுள்ள ஒரு தந்தையாய் நான் செல்லுமிடமெல்லாம் கண்ணின் மணி போல என்னை காத்தருளும். என்னை உமக்கு உகந்த மகனாக / மகளாக மாற்றியருளும். என் மீது இரக்கம் வையும். தந்தையே இறைவா, எங்கள் ஆன்மாக்களின் இனிமையான நம்பிக்கையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச் செய்தருளும். தந்தையே இறைவா,

மக்களினத்தார் மீது பொழியப்படும் அளவற்ற நன்மையின் வடிவமே. மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். தந்தையே இறைவா, மனுக்குலத்தின் மீது பெய்யும் கருணை மழையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். ஆமென்.

**விவிலிய வாசகம்**
**எபிரேயர் 12:5–11**

தம் பிள்ளைகளிடம் பேசுவதுபோல் இறைவன் உங்களுக்குத் தந்த பின்வரும் அறிவுரையை நீங்கள் மறந்துவிட்டீர்கள்; "பிள்ளாய், ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாம் எனத் தள்ளிவிடாதே. அவர் கண்டிக்கும்போது தளர்ந்து போகாதே". "தந்தை தாம் ஏற்றுக்கொண்ட மக்களைத் தண்டிக்கிறார்; ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார்". திருத்தப்படுவதற்காகத் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள். கடவுள் உங்களைத் தம் பிள்ளைகளாக நடத்துகிறார். தந்தை தண்டித்துத் திருத்தாத பிள்ளை உண்டோ? எல்லாப் பிள்ளைகளுக்கும் அளிக்கப்படும் தண்டனை உங்களுக்கு அளிக்கப்படாவிட்டால், நீங்கள் உண்மையான பிள்ளைகளாய் இருக்க மாட்டீர்கள்; முறை தவறிப் பிறந்த பிள்ளைகளாகவே இருப்பீர்கள்.

இவ்வுலகத் தந்தையர் நம்மைத் தண்டித்துத் திருத்தினார்கள். நாமும் அவர்களுக்கு மதிப்புக் கொடுத்து வந்தோம். அவ்வாறாயின், விண்ணகத் தந்தைக்கு நாம் எவ்வளவோ பணிந்து வாழ வேண்டும் அன்றோ? மேலும், இவ்வுலகத் தந்தையர் தங்களுக்கு நலமெனத் தோன்றின வகையில் சிறிது காலம் நம்மைத் தண்டித்துத் திருத்தினார்கள். ஆனால் கடவுள், நமது நலனுக்காக, நாமும் அவருடைய தூய்மையில் பங்குகொள்ள வேண்டுமென்பதற்காகவே நம்மைத் தண்டித்துத் திருத்துகிறார். இவ்வாறு திருத்தப்படுவது இப்போது மகிழ்ச்சிக்குரியதாய் இராமல், துயரத்துக்குரியதாகவே தோன்றும். ஆனால் பின்னர், இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் அமைதியையும் நேர்மையான வாழ்வையும் பயனாகப் பெறுவர்.

**மூன்றாம் நாளுக்குரிய செபம்**

என்றென்றும் நன்மையின் ஊற்றாய் விளங்கும் நல்ல தேவனாகிய இறைவா, எம் ஒவ்வொருவரின் பாவங்களில் இருந்தும் தூய்மைப்படுத்தப்பட்டு, நிறைவுள்ளவர்களாக

நாங்கள் மாறவேண்டும் என்பதற்காகவே, எம் வாழ்வில் துன்பத் துயரங்களையும், வேதனைகளையும் அனுமதிக்கிறீர். இரக்கமுள்ள தந்தையே, எப்போதும் உமக்கே நாங்கள் பிரமாணிக்கமும், உண்மையும் உள்ளவர்களாக இருக்க அருள்புரியும். நாங்கள் ஒருபோதும் அவநம்பிக்கை அடையவிடாதேயும். துன்பங்கள் சோதனைகளின் மத்தியில் உமது அருள் எம்மை நிலைநிறுத்தும் என்பதை நினைவூட்டியருளும், தாங்க முடியாத வேதனைகளும், துன்பச்சுமைகளும் எம்மை வாட்டும்போது, மலர்ந்த முகத்தோடும், முணுமுணுக்காமலும் அத்துன்பங்கள் அனைத்தையும், உம்மீது கொண்டுள்ள மிகுதியான அன்பினால் தாங்கிக் கொள்ளும் வரமருளும். எந்த சூழ்நிலையிலும் உம்மீது கொண்ட அன்பில் நிலைத்திருக்கவும், உமது முடிவற்ற அன்பில் ஆழமாக நம்பிக்கைக் கொள்ளவும் எமக்கு அருள்புரியும்.

– ஆமென்.

**நன்றி செபம்**

இரக்கமே உருவான எம் விண்ணகத் தந்தையே இறைவா, நன்றி கூறி உம்மைத் துதித்துப் போற்றி, செபத்தில் உம்மோடு நேரம் செலவிடும் இந்த வாய்ப்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிடைத்தற்கரிய எம் வாழ்வினை கொடையாகத் தந்ததை நினைத்து நன்றி கூறுகிறோம். எமது குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் உமது அன்பையும், இரக்கத்தையும் தொடர்ந்து பிரதிபலிக்கும் அனைத்து மக்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். எம் ஒவ்வொருவரையும் அளவற்ற விதத்தில் அன்பு செய்யும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். தந்தையே இறைவா, உமது அன்புதான் எமது நம்பிக்கை. உமது நிறைவான அன்புதான், தீயோனாகிய சாத்தானின் கொடிய துன்பங்களிலிருந்து எம்மை காப்பாற்றுகிறது. எம்மில் ஏராளமானோரின் இதயங்களை உமது அளவற்ற இரக்கத்தால் தொட்டு மகிழ்ச்சியில் மனம் நெகிழச் செய்கின்றீர் என்பதை உணர்ந்து உமக்கு நன்றி கூறுகிறோம். வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு உலகத்தின் கொடூரமாக பாவ சார்புள்ள தாக்குதல்களினால் இறுகிப்போன எமது கடின இதயங்களை மாற்றி, உம்மீது கொண்டுள்ள அன்பினால் பற்றி எரியச் செய்வதற்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். அன்பிற்கினிய நல்ல தந்தையே இறைவா! எம் ஒவ்வொருவர் மீதும் நீர் காட்டும் கனிவான அன்பை நினைத்து உமக்கு நன்றி கூறுகிறோம்.

அன்பான எம் தந்தையே இறைவா, கனிவோடு எம்மைப் பாதுகாத்தருளும். உமது பாதுகாப்பான அன்புக் கரங்களுக்குள் எம்மை வைத்து, நாங்கள் உமது கரங்களில் பாதுகாப்பை உணரச் செய்யும். எங்களின் அன்பான இனிய தந்தையே, எங்கள் செபங்களையும், விண்ணப்பங்களையும் தயவுடன் கேட்டு அருள் புரிந்து, எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவதற்காக உமக்கு மீண்டும் நன்றி கூறுகிறோம். நாங்கள் உம்மை எப்பொழுதும், துதித்து புகழ்ந்து நன்றி கூறுவதிலிருந்து மனம் மாற விடாதேயும், எப்பொழும் உமது அன்பு நாங்கள் எங்கு சென்றாலும் எம்மைத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது என்பதையும், எங்கள் துன்ப வேளைகளில் உமது அன்பு எப்போது ஆறுதலாய் இருக்கிறதென்றம் உணரச் செய்தருளும்.

என் அன்பான தந்தையே, படைப்பின் தேவனே, உம்மைப் புகழ்கின்றோம். உம்மை ஆராதித்து துதிக்கிறோம். உம்மை அன்பு செய்கிறோம். உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

இரக்கத்தின் ஆண்டவராகிய இயேசுவே, விண்ணகத் தந்தையின் ஒரே திருமகனே, உம்மைப் போற்றுகிறோம். உம்மைப் புகழ்கின்றோம், உம்மை துதித்து ஆராதிக்கின்றோம். உமக்கு நன்றி கூறுகின்றோம். உம்மை முழு மனதோடு அன்பு செய்கிறோம்.

எம்மை அர்ச்சித்து புனிதப்படுத்திவழி நடத்துபவரான தூய ஆவியானவரே, உம்மைப் போற்றுகிறோம், புகழ்க்ன்றோம், வாழ்த்துகின்றோம். உம்மை ஆராதிக்கின்றோம், உம்மை அன்பு செய்து நன்றி செலுத்துகின்றோம்.

மாசற்ற கன்னி மரியே, இயேசு கிறிஸ்துவின் அன்பு அன்னையே, எங்கள் ஒவ்வொருவரின் நல்வாழ்வுக்காக பரிந்து பேசும் அன்பு அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

இறைவனின் அனைத்து புனிதர்களே, வானதூதர்களே எமக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

– ஆமென்.

## நான்காம் நாள்
## நம்மை பராமரிக்கும் இறைவன்

**கர்த்தர் கற்பித்த செபம்**

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள்அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும், எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து
எங்களை விடுவித்தருளும். ஆமென்.

**தந்தையாம் கடவுளுக்கு அர்ப்பண செபம்**

விண்ணுலகத்தில் இருக்கிற எங்கள் அன்பு பிதாவே, உம்மிடம் வந்து, இன்று எங்களையே உமது அன்புக் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். எங்கள் மனம், உள்ளம், விருப்பங்கள் மற்றும் வாழ்க்கை அனைத்தையும் முழுமையாக உமக்கே அர்ப்பணிக்கிறோம். எங்களை உம்முடைய திருவுளப்படியே நடத்தும். மனுக்குலம் முழுவதும் உம்மை அறியவும், ஆராதிக்கவும், அன்பு செய்யவும் கருவிகளாய் எங்களை பயன்படுத்தும். உமது எல்லையற்ற அன்பை எங்கள் செயல்கள் பறைச்சாற்றட்டும். எங்கள் நாவு உமது புகழ் பாடட்டும். எங்கள் எண்ணங்கள் உம்மால் மட்டுமே தூண்டப்படட்டும். எங்கள் அன்பு பிதாவே, நாங்கள் உம்மை போற்றுகிறோம், வணங்குகிறோம், ஆராதிக்கிறோம், அன்பு செய்கிறோம். ஆமென்.

**அப்பா பிதாவின் பாதுகாப்பு வளையம் செபம்**

அப்பா பிதாவே! பாவிகளாயிருக்கிற எங்கள் மேல் இரக்கமாயிரும். நடுத்தீர்வையின் நாளில் எங்களைக் காத்தருளும். உமது பாதுகாப்பில் எம்மை வைத்தருளும். உமது பாதுகாப்பு வளையத்தினால் சூழ்ந்து எம்மைக் காத்தருளும். (முகம் குப்புற விழுந்து மும்முறை சொல்லவும்)

**நம்மை பராமரிக்கும் இறைவன்**

“உங்கள் தேவைகள் என்னவென்றும், உங்கள் விருப்பம் மற்றும் இதயத்தின் எண்ணங்கள் அனைத்தையும் நான் அறிந்திருக்கிறேன். ஒரு தந்தையின் ஆற்றலில் முழு நம்பிக்கைக் கொண்டுள்ள மகனைப் போல, உங்கள் தேவைகளில் முழு நம்பிக்கையோடு என்னை அணுகினால் நான் அளவுகடந்த மகிழ்ச்சி அடைவேன் அல்லவா ? அப்படி கேட்கும்போது, மிகச் சிறியதோ, அல்லது மிகப்பெரிய காரியமோ, எதுவானாலும் தர மறுப்பேனோ (தராமல் இருப்பேனோ)?”

**கடவுள் என் தந்தை**

என் விண்ணகத் தந்தையே, நீர் என்னுடைய தந்தை என்பதையும், நான் உம்முடைய பிள்ளை என்பதையும் அறிவது எத்துனை இனிமையானது. எனது ஆன்மீக வானில் இருள் சூழ்ந்திருக்கும்போதும், எனது சிலுவையின் பாரம் என்னை அழுத்தும் போதும், தந்தையே, நீர் என் மீது கொண்டுள்ள அன்பை விசுவசிக்கிறேன் என்று அடிக்கடி சொல்வதின் தேவையை நான் உணர்கிறேன். ஆம் தந்தாய், எனது வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நீர் எனக்கு தந்தையாய் இருக்கிறீர், நான் உமக்கு பிள்ளையாக இருக்கிறேன் என்பதை நான் விசுவசிக்கிறேன். நீர் எல்லையற்ற அன்பினால் என்னை நேசிக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். இரவு பகலாய் என்னை நீர் காத்து வருகிறீர், உமது ஆணையின்றி என் தலையிலிருந்து ஒரு முடி கூட விழுவதில்லை என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஞானத்தால், எனக்கு நன்மையானது எதுவென என்னைவிட மேலாகவே நீர் அறிந்திருக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஆற்றலால் எனக்கு நேரும் தீமையைக்கூட நன்மையாக மாற்ற வல்லவர் என்று விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற நன்மைத்தனத்தால், உம்மை அன்பு செய்பவருக்கு அனைத்தையும் நன்மையாகவே மாற்றுகிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். என்னைத் தாக்க வரும் கரங்களில் கூட உமது குணமளிக்கும் கரங்களையே காண்கிறேன், முத்தி செய்கிறேன். நான் உம்மை விசுவசிக்கிறேன். என் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் அதிகப்படுத்தியருளும்.

எனது வாழ்வின் எல்லா நிகழ்வுகளையும் உமது அன்பே வழிநடத்துகிறது என்பதை நான் கண்டுணரச் செய்யும். தன் தாயின் கரங்களில் தன்னை முழுவதும் அர்ப்பணிக்கும் ஒரு குழந்தை போல என்னை முழுவதும் உம்மிடம் அர்ப்பணிக்க எனக்கு கற்பித்தருளும். தந்தையே! நீர் அனைத்தையும் அறிகிறீர், அனைத்தையும்

காண்கிறீர். நான் என்னை அறிவதை விட நீர் என்னை நன்றாக அறிந்துள்ளீர். நீர் அனைத்தையும் செய்யும் ஆற்றல் கொண்டு என்னை அன்பு செய்கிறீர். தந்தையே, நான் எப்போதும் உம்மையே நாடி வரவேண்டுமென நீர் விரும்புவதால், நம்பிக்கையுடன் உம் திருமகன் இயேசுவோடும், அன்னை மரியாளோடும் உம்மை நாடி வந்து உம்மிடம் நான் கேட்கும் மன்றாட்டு என்னவென்றால். (உங்கள் தனிப்பட்ட மன்றாட்டை இங்கு கூறவும்). இம்மன்றாட்டை இயேசுவின் திருஇருதயத்தோடும், மரியாளின் மாசற்ற இதயத்தோடும் இணைத்து என்னையும், என் செபங்களையும், தியாகச்செயல்களையும், துன்பங்களையும், கடமையுணர்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். தூய ஆவியின் ஒளியையும், அருளையும், ஆற்றலையும் எனக்குத் தாரும். உமது பரிசுத்த ஆவியால் என்னை உறுதிப்படுத்தியருளும். அதனால் நான் அவரை ஒருபோதும் இழக்காதிருக்கவும், அவரை மனம் நோகச் செய்யாதிருக்கவும், அவரை என்னில் வலுவிழக்கச் செய்யாதிருக்கவும், வரம் தந்தருளுமாறு உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நான் மன்றாடுகிறேன். ஆண்டவராகிய இயேசுவே, உம் இதயத்தை திறந்து அதில் என் இதயத்தை வைத்து, மரியாளின் மாசற்ற இதயத்தோடு அதை இறைத்தந்தைக்கு அர்ப்பணித்தருளும். எனக்குத் தேவையான அருளைப் பெற்றுத்தாரும். வானகத் தந்தையே, எல்லா மனிதரையும் உம்மிடம் அழைத்துக் கொள்ளும். உமது தந்தைக்குரிய இரக்கத்தையும், தெய்வீக கருணையையும், உலகமெல்லாம் அறிக்கையிட செய்தருளும்.

என் மீது கனிவுள்ள ஒரு தந்தையாய் நான் செல்லுமிடமெல்லாம் கண்ணின் மணி போல என்னை காத்தருளும். என்னை உமக்கு உகந்த மகனாக / மகளாக மாற்றியருளும். என் மீது இரக்கம் வையும். தந்தையே இறைவா, எங்கள் ஆன்மாக்களின் இனிமையான நம்பிக்கையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச் செய்தருளும். தந்தையே இறைவா, மக்களினத்தார் மீது பொழியப்படும் அளவற்ற நன்மையின் வடிவமே. மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். தந்தையே இறைவா, மனுக்குலத்தின் மீது பெய்யும் கருணை மழையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். ஆமென்.

**விவிலிய வாசகம்**

**திருப்பாடல்கள் 65:9–13**

மண்ணுலகைப் பேணி அதன் நீர்வளத்தையும் நிலவளத்தையும் பெருக்கினீர்! கடவுளின் ஆறு கரைபுரண்டோடியது; அது தானியங்களை நிரம்ப விளையச் செய்தது; நீரே அவற்றை இவ்வாறு விளையச் செய்துள்ளீர். அதன் படைசால்களில் தண்ணீர் நிறைந்தோடச் செய்தீர்; அதன் கரையோர நிலங்களைப் பரம்படித்து மென்மழையால் மிருதுவாக்கினீர்; அதன் வளமைக்கு ஆசி வழங்கினீர். ஆண்டு முழுவதும் உமது நலத்தால் முடிசூட்டுகின்றீர்; உம்முடைய வழிகள் எல்லாம் வளம் கொழிக்கின்றன. பாலைநிலத்தில் மேய்ச்சல் நிலங்கள் செழுமை பொங்குகின்றன; குன்றுகள் அக்களிப்பை இடைக்கச்சையாய் அணிந்துள்ளன. புல்வெளிகள் மந்தைகளை ஆடையெனக் கொண்டுள்ளன; பள்ளத்தாக்குகள் தானியங்களால் தங்களைப் போர்த்திக் கொண்டுள்ளன. அவற்றில் எங்கும் ஆரவாரம்! எம்மருங்கும் இன்னிசை!

**நான்காம் நாளுக்குரிய செபம்**

எல்லையற்ற அன்பினால் அக்கறையோடு எம்மை கண்ணோக்கும், இரக்கமும், கனிவும் நிறைந்த எம் அன்பு தந்தையே இறைவா, நன்மை அனைத்துக்கும் ஊற்றாக இருப்பவரே, எம் எல்லாத் தேவைகளிலும் தாராளமாய், குறைவின்றி வாரி வழங்கும் வள்ளல் நீர். எங்களை முழுவதும் உம் விருப்பத்திற்கு கையளிக்கின்றோம். எங்களுக்குத் தேவையானது எது, நல்லது எது என்பதை நீர் முழுவதும் அறிந்திருக்கிறீர். எனவே உம்மைப் போற்றுகின்றோம், புகழ்கின்றோம், மாட்சிபடுத்துகின்றோம். நாங்கள் முழுவதும் உமக்கே சொந்தம். ஆம் தந்தையே, உமக்கு மட்டுமே சொந்தம். உமது திருசித்தத்தின்படி எம்மை வழிநடத்தும்.

–ஆமென்.

**நன்றி செபம்**

இரக்கமே உருவான எம் விண்ணகத் தந்தையே இறைவா, நன்றி கூறி உம்மைத் துதித்துப் போற்றி, செபத்தில் உம்மோடு நேரம் செலவிடும் இந்த வாய்ப்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிடைத்தற்கரிய எம் வாழ்வினை கொடையாகத் தந்ததை நினைத்து நன்றி கூறுகிறோம். எமது குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் உமது அன்பையும், இரக்கத்தையும் தொடர்ந்து பிரதிபலிக்கும் அனைத்து மக்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். எம் ஒவ்வொருவரையும் அளவற்ற விதத்தில் அன்பு செய்யும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். தந்தையே இறைவா, உமது அன்புதான் எமது

நம்பிக்கை. உமது நிறைவான அன்புதான், தீயோனாகிய சாத்தானின் கொடிய துன்பங்களிலிருந்து எம்மை காப்பாற்றுகிறது. எம்மில் ஏராளமானோரின் இதயங்களை உமது அளவற்ற இரக்கத்தால் தொட்டு மகிழ்ச்சியில் மனம் நெகிழச் செய்கின்றீர் என்பதை உணர்ந்து உமக்கு நன்றி கூறுகிறோம். வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு உலகத்தின் கொடூரமாக பாவ சார்புள்ள தாக்குதல்களினால் இறுகிப்போன எமது கடின இதயங்களை மாற்றி, உம்மீது கொண்டுள்ள அன்பினால் பற்றி எரியச் செய்வதற்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். அன்பிற்கினிய நல்ல தந்தையே இறைவா! எம் ஒவ்வொருவர் மீதும் நீர் காட்டும் கனிவான அன்பை நினைத்து உமக்கு நன்றி கூறுகிறோம்.

அன்பான எம் தந்தையே இறைவா, கனிவோடு எம்மைப் பாதுகாத்தருளும். உமது பாதுகாப்பான அன்புக் கரங்களுக்குள் எம்மை வைத்து, நாங்கள் உமது கரங்களில் பாதுகாப்பை உணரச் செய்யும். எங்களின் அன்பான இனிய தந்தையே, எங்கள் செபங்களையும், விண்ணப்பங்களையும் தயவுடன் கேட்டு அருள் புரிந்து, எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவதற்காக உமக்கு மீண்டும் நன்றி கூறுகிறோம். நாங்கள் உம்மை எப்பொழுதும், துதித்து புகழ்ந்து நன்றி கூறுவதிலிருந்து மனம் மாற விடாதேயும், எப்பொழும் உமது அன்பு நாங்கள் எங்கு சென்றாலும் எம்மைத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது என்பதையும், எங்கள் துன்ப வேளைகளில் உமது அன்பு எப்போது ஆறுதலாய் இருக்கிறதென்றம் உணரச் செய்தருளும்.

என் அன்பான தந்தையே, படைப்பின் தேவனே, உம்மைப் புகழ்கின்றோம். உம்மை ஆராதித்து துதிக்கிறோம். உம்மை அன்பு செய்கிறோம். உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

இரக்கத்தின் ஆண்டவராகிய இயேசுவே, விண்ணகத் தந்தையின் ஒரே திருமகனே, உம்மைப் போற்றுகிறோம். உம்மைப் புகழ்கின்றோம், உம்மை துதித்து ஆராதிக்கின்றோம். உமக்கு நன்றி கூறுகின்றோம். உம்மை முழு மனதோடு அன்பு செய்கிறோம்.

எம்மை அர்ச்சித்து புனிதப்படுத்திவழி நடத்துபவரான தூய ஆவியானவரே, உம்மைப் போற்றுகிறோம், புகழ்க்ன்றோம், வாழ்த்துகின்றோம். உம்மை ஆராதிக்கின்றோம், உம்மை அன்பு செய்து நன்றி செலுத்துகின்றோம்.

மாசற்ற கன்னி மரியே, இயேசு கிறிஸ்துவின் அன்பு அன்னையே, எங்கள் ஒவ்வொருவரின் நல்வாழ்வுக்காக பரிந்து பேசும் அன்பு அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

இறைவனின் அனைத்து புனிதர்களே, வானதூதர்களே எமக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

– ஆமென்.

## ஐந்தாம் நாள்
## இறைவன் நமது அன்புத் தந்தை

**கர்த்தர் கற்பித்த செபம்**

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள்அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும், எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து
எங்களை விடுவித்தருளும். ஆமென்.

**தந்தையாம் கடவுளுக்கு அர்ப்பண செபம்**

விண்ணுலகத்தில் இருக்கிற எங்கள் அன்பு பிதாவே, உம்மிடம் வந்து, இன்று எங்களையே உமது அன்புக் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். எங்கள் மனம், உள்ளம், விருப்பங்கள் மற்றும் வாழ்க்கை அனைத்தையும் முழுமையாக உமக்கே அர்ப்பணிக்கிறோம். எங்களை உம்முடைய திருவுளப்படியே நடத்தும். மனுக்குலம் முழுவதும் உம்மை அறியவும், ஆராதிக்கவும், அன்பு செய்யவும் கருவிகளாய் எங்களை பயன்படுத்தும். உமது எல்லையற்ற அன்பை எங்கள் செயல்கள் பறைச்சாற்றட்டும். எங்கள் நாவு உமது புகழ் பாடட்டும். எங்கள் எண்ணங்கள் உம்மால் மட்டுமே தூண்டப்படட்டும். எங்கள் அன்பு பிதாவே, நாங்கள் உம்மை போற்றுகிறோம், வணங்குகிறோம், ஆராதிக்கிறோம், அன்பு செய்கிறோம். ஆமென்.

**அப்பா பிதாவின் பாதுகாப்பு வளையம் செபம்**

அப்பா பிதாவே! பாவிகளாயிருக்கிற எங்கள் மேல் இரக்கமாயிரும். நடுத்தீர்வையின் நாளில் எங்களைக் காத்தருளும். உமது பாதுகாப்பில் எம்மை வைத்தருளும். உமது பாதுகாப்பு வளையத்தினால் சூழ்ந்து எம்மைக் காத்தருளும். (முகம் குப்புற விழுந்து மும்முறை சொல்லவும்)

**இறைவன் நமது அன்புத் தந்தை**

“தான் ஈன்றெடுத்த தன் குழந்தையை தாய் ஒருநாளும் மறப்பதில்லை. ஒரு தாய் தன் குழந்தையை எவ்வளவு நேசிப்பாரோ, அதைவிட பன்மடங்காக அக்குழந்தையைப் படைத்தவராகிய நான் நேசிப்பேன் அல்லவா ? ஒருவேளை, ஏதோ சில குறைகளினால் ஒரு தாய் தன் குழந்தையை நிறைவாக நேசிக்கவில்லை என்றாலும், அதற்காகவே நான் அக்குழந்தையை இன்னும் அதிகமாக நேசிப்பேன். ஒருவேளை, அக்குழந்தை தன்னைப் படைத்தவரும், தந்தையுமாகிய என்னையே மறந்தாலும், நான் ஒருபோதும் மறவாமல், எப்போதும் அக்குழந்தையை நினைவு கூர்ந்து அன்பு செய்வேன்”.

**கடவுள் என் தந்தை**

என் விண்ணகத் தந்தையே, நீர் என்னுடைய தந்தை என்பதையும், நான் உம்முடைய பிள்ளை என்பதையும் அறிவது எத்துணை இனிமையானது. எனது ஆன்மீக வானில் இருள் சூழ்ந்திருக்கும்போதும், எனது சிலுவையின் பாரம் என்னை அழுத்தும் போதும், தந்தையே, நீர் என் மீது கொண்டுள்ள அன்பை விசுவசிக்கிறேன் என்று அடிக்கடி சொல்வதின் தேவையை நான் உணர்கிறேன். ஆம் தந்தாய், எனது வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நீர் எனக்கு தந்தையாய் இருக்கிறீர், நான் உமக்கு பிள்ளையாக இருக்கிறேன் என்பதை நான் விசுவசிக்கிறேன். நீர் எல்லையற்ற அன்பினால் என்னை நேசிக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். இரவு பகலாய் என்னை நீர் காத்து வருகிறீர், உமது ஆணையின்றி என் தலையிலிருந்து ஒரு முடி கூட விழுவதில்லை என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஞானத்தால், எனக்கு நன்மையானது எதுவென என்னைவிட மேலாகவே நீர் அறிந்திருக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஆற்றலால் எனக்கு நேரும் தீமையைக்கூட நன்மையாக மாற்ற வல்லவர் என்று விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற நன்மைத்தனத்தால், உம்மை அன்பு செய்பவருக்கு அனைத்தையும் நன்மையாகவே மாற்றுகிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். என்னைத் தாக்க வரும் கரங்களில் கூட உமது குணமளிக்கும் கரங்களையே காண்கிறேன், முத்தி செய்கிறேன். நான் உம்மை விசுவசிக்கிறேன். என் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் அதிகப்படுத்தியருளும்.

எனது வாழ்வின் எல்லா நிகழ்வுகளையும் உமது அன்பே வழிநடத்துகிறது என்பதை நான் கண்டுணரச் செய்யும். தன் தாயின் கரங்களில் தன்னை முழுவதும் அர்ப்பணிக்கும் ஒரு குழந்தை போல என்னை முழுவதும் உம்மிடம் அர்ப்பணிக்க

எனக்கு கற்பித்தருளும். தந்தையே! நீர் அனைத்தையும் அறிகிறீர், அனைத்தையும் காண்கிறீர். நான் என்னை அறிவதை விட நீர் என்னை நன்றாக அறிந்துள்ளீர். நீர் அனைத்தையும் செய்யும் ஆற்றல் கொண்டு என்னை அன்பு செய்கிறீர். தந்தையே, நான் எப்போதும் உம்மையே நாடி வரவேண்டுமென நீர் விரும்புவதால், நம்பிக்கையுடன் உம் திருமகன் இயேசுவோடும், அன்னை மரியாளோடும் உம்மை நாடி வந்து உம்மிடம் நான் கேட்கும் மன்றாட்டு என்னவென்றால். (உங்கள் தனிப்பட்ட மன்றாட்டை இங்கு கூறவும்). இம்மன்றாட்டை இயேசுவின் திருஇருதயத்தோடும், மரியாளின் மாசற்ற இதயத்தோடும் இணைத்து என்னையும், என் செபங்களையும், தியாகச்செயல்களையும், துன்பங்களையும், கடமையுணர்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். தூய ஆவியின் ஒளியையும், அருளையும், ஆற்றலையும் எனக்குத் தாரும். உமது பரிசுத்த ஆவியால் என்னை உறுதிப்படுத்தியருளும். அதனால் நான் அவரை ஒருபோதும் இழக்காதிருக்கவும், அவரை மனம் நோகச் செய்யாதிருக்கவும், அவரை என்னில் வலுவிழக்கச் செய்யாதிருக்கவும், வரம் தந்தருளுமாறு உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நான் மன்றாடுகிறேன். ஆண்டவராகிய இயேசுவே, உம் இதயத்தை திறந்து அதில் என் இதயத்தை வைத்து, மரியாளின் மாசற்ற இதயத்தோடு அதை இறைத்தந்தைக்கு அர்ப்பணித்தருளும். எனக்குத் தேவையான அருளைப் பெற்றுத்தாரும். வானகத் தந்தையே, எல்லா மனிதரையும் உம்மிடம் அழைத்துக் கொள்ளும். உமது தந்தைக்குரிய இரக்கத்தையும், தெய்வீக கருணையையும், உலகமெல்லாம் அறிக்கையிட செய்தருளும்.

என் மீது கனிவுள்ள ஒரு தந்தையாய் நான் செல்லுமிடமெல்லாம் கண்ணின் மணி போல என்னை காத்தருளும். என்னை உமக்கு உகந்த மகனாக / மகளாக மாற்றியருளும். என் மீது இரக்கம் வையும். தந்தையே இறைவா, எங்கள் ஆன்மாக்களின் இனிமையான நம்பிக்கையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச் செய்தருளும். தந்தையே இறைவா, மக்களினத்தார் மீது பொழியப்படும் அளவற்ற நன்மையின் வடிவமே. மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். தந்தையே இறைவா, மனுக்குலத்தின் மீது பெய்யும் கருணை மழையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். ஆமென்.

**விவிலிய வாசகம்**
**ஒசேயா 11:1–4**

இஸ்ரயேல் குழந்தையாய் இருந்தபோது அவன்மேல் அன்பு கூர்ந்தேன்; எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன். எவ்வளவுக்கு நான் அவர்களை வருந்தி அழைத்தேனோ, அவ்வளவுக்கு என்னை விட்டுப் பிடிவாதமாய் விலகிப் போனார்கள்; பாகால்களுக்குப் பலியிட்டார்கள், சிலைகளுக்குத் தூபம் காட்டினார்கள். ஆனால் எப்ராயிமுக்கு நடைபயிற்றுவித்தது நானே; அவர்களைக் கையிலேந்தியதும் நானே; ஆயினும், அவர்களைக் குணமாக்கியது நானே என்பதை அவர்கள் உணராமற் போனார்கள். பரிவு என்னும் கட்டுகளால் அவர்களைப் பிணைத்து, அன்புக் கயிறுகளால் கட்டி நடத்தி வந்தேன். அவர்கள் கழுத்தின்மேல் இருந்த நுகத்தை அகற்றினேன்; அவர்கள் பக்கம் சாய்ந்து உணவு ஊட்டினேன்.

**ஐந்தாம் நாளுக்குரிய செபம்**

அகிலம் அனைத்தையும் படைத்து பாதுகாத்துவரும் இரக்கமே உருவான இறைவா, நாங்கள் உம்மீது முழுமையான நம்பிக்கை வைக்கிறோம். நீர் எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்த இறைவன், எல்லாம் அறிந்த தேவன். ஒன்றுமில்லாமையில் இருந்தே எங்கள் அனைவரையும் படைத்த தேவன் நீரே. எம் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்துள்ளீர். எங்கள் அனைவரையும் உமது உள்ளங்கையில் பொறித்து வைத்துள்ளீர். நீர் ஒருபோதும் எம்மை மறப்பதில்லை.

எங்களையே உமக்கு அர்ப்பணமாக்கி, அபிஷேகம் செய்து, எங்கள் ஒவ்வொருவரையும் நிபந்தனையின்றி அளவற்ற விதத்தில் அன்பு செய்கிறீர். எங்கள் விண்ணகத் தந்தையே இறைவா, எல்லாத் தீமைகளில் இருந்தும் எங்களைக் காத்தருளும். தீயோனின் எல்லா சோதனைகளில் இருந்தும் எம்மைப் பாதுகாத்து, உமது இறைஅரசின் மாட்சிமைக்கு வழிநடத்தும்.

– ஆமென்.

**நன்றி செபம்**

இரக்கமே உருவான எம் விண்ணகத் தந்தையே இறைவா, நன்றி கூறி உம்மைத் துதித்துப் போற்றி, செபத்தில் உம்மோடு நேரம் செலவிடும் இந்த வாய்ப்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிடைத்தற்கரிய எம் வாழ்வினை கொடையாகத் தந்ததை நினைத்து நன்றி கூறுகிறோம். எமது குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் உமது

அன்பையும், இரக்கத்தையும் தொடர்ந்து பிரதிபலிக்கும் அனைத்து மக்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். எம் ஒவ்வொருவரையும் அளவற்ற விதத்தில் அன்பு செய்யும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். தந்தையே இறைவா, உமது அன்புதான் எமது நம்பிக்கை. உமது நிறைவான அன்புதான், தீயோனாகிய சாத்தானின் கொடிய துன்பங்களிலிருந்து எம்மை காப்பாற்றுகிறது. எம்மில் ஏராளமானோரின் இதயங்களை உமது அளவற்ற இரக்கத்தால் தொட்டு மகிழ்ச்சியில் மனம் நெகிழச் செய்கின்றீர் என்பதை உணர்ந்து உமக்கு நன்றி கூறுகிறோம். வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு உலகத்தின் கொடூரமாக பாவ சார்புள்ள தாக்குதல்களினால் இறுகிப்போன எமது கடின இதயங்களை மாற்றி, உம்மீது கொண்டுள்ள அன்பினால் பற்றி எரியச் செய்வதற்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். அன்பிற்கினிய நல்ல தந்தையே இறைவா! எம் ஒவ்வொருவர் மீதும் நீர் காட்டும் கனிவான அன்பை நினைத்து உமக்கு நன்றி கூறுகிறோம்.

அன்பான எம் தந்தையே இறைவா, கனிவோடு எம்மைப் பாதுகாத்தருளும். உமது பாதுகாப்பான அன்புக் கரங்களுக்குள் எம்மை வைத்து, நாங்கள் உமது கரங்களில் பாதுகாப்பை உணரச் செய்யும். எங்களின் அன்பான இனிய தந்தையே, எங்கள் செபங்களையும், விண்ணப்பங்களையும் தயவுடன் கேட்டு அருள் புரிந்து, எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவதற்காக உமக்கு மீண்டும் நன்றி கூறுகிறோம். நாங்கள் உம்மை எப்பொழுதும், துதித்து புகழ்ந்து நன்றி கூறுவதிலிருந்து மனம் மாற விடாதேயும், எப்பொழும் உமது அன்பு நாங்கள் எங்கு சென்றாலும் எம்மைத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது என்பதையும், எங்கள் துன்ப வேளைகளில் உமது அன்பு எப்போது ஆறுதலாய் இருக்கிறதென்றம் உணரச் செய்தருளும்.

என் அன்பான தந்தையே, படைப்பின் தேவனே, உம்மைப் புகழ்கின்றோம். உம்மை ஆராதித்து துதிக்கிறோம். உம்மை அன்பு செய்கிறோம். உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

இரக்கத்தின் ஆண்டவராகிய இயேசுவே, விண்ணகத் தந்தையின் ஒரே திருமகனே, உம்மைப் போற்றுகிறோம். உம்மைப் புகழ்கின்றோம், உம்மை துதித்து ஆராதிக்கின்றோம். உமக்கு நன்றி கூறுகின்றோம். உம்மை முழு மனதோடு அன்பு செய்கிறோம்.

எம்மை அர்ச்சித்து புனிதப்படுத்திவழி நடத்துபவரான தூய ஆவியானவரே, உம்மைப் போற்றுகிறோம், புகழ்க்ன்றோம், வாழ்த்துகின்றோம். உம்மை ஆராதிக்கின்றோம், உம்மை அன்பு செய்து நன்றி செலுத்துகின்றோம்.

மாசற்ற கன்னி மரியே, இயேசு கிறிஸ்துவின் அன்பு அன்னையே, எங்கள் ஒவ்வொருவரின் நல்வாழ்வுக்காக பரிந்து பேசும் அன்பு அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

இறைவனின் அனைத்து புனிதர்களே, வானதூதர்களே எமக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

– ஆமென்.

## ஆறாம் நாள்
## என்றென்றும் இரக்கமே உருவான தந்தையாகிய இறைவன்

**கர்த்தர் கற்பித்த செபம்**

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள்அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும், எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து
எங்களை விடுவித்தருளும். ஆமென்.

**தந்தையாம் கடவுளுக்கு அர்ப்பண செபம்**

விண்ணுலகத்தில் இருக்கிற எங்கள் அன்பு பிதாவே, உம்மிடம் வந்து, இன்று எங்களையே உமது அன்புக் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். எங்கள் மனம், உள்ளம், விருப்பங்கள் மற்றும் வாழ்க்கை அனைத்தையும் முழுமையாக உமக்கே அர்ப்பணிக்கிறோம். எங்களை உம்முடைய திருவுளப்படியே நடத்தும். மனுக்குலம் முழுவதும் உம்மை அறியவும், ஆராதிக்கவும், அன்பு செய்யவும் கருவிகளாய் எங்களை பயன்படுத்தும். உமது எல்லையற்ற அன்பை எங்கள் செயல்கள் பறைச்சாற்றட்டும். எங்கள் நாவு உமது புகழ் பாடட்டும். எங்கள் எண்ணங்கள் உம்மால் மட்டுமே தூண்டப்படட்டும். எங்கள் அன்பு பிதாவே, நாங்கள் உம்மை போற்றுகிறோம், வணங்குகிறோம், ஆராதிக்கிறோம், அன்பு செய்கிறோம். ஆமென்.

**அப்பா பிதாவின் பாதுகாப்பு வளையம் செபம்**

அப்பா பிதாவே! பாவிகளாயிருக்கிற எங்கள் மேல் இரக்கமாயிரும். நடுத்தீர்வையின் நாளில் எங்களைக் காத்தருளும். உமது பாதுகாப்பில் எம்மை வைத்தருளும். உமது பாதுகாப்பு வளையத்தினால் சூழ்ந்து எம்மைக் காத்தருளும். (முகம் குப்புற விழுந்து மும்முறை சொல்லவும்)

**என்றென்றும் இரக்கமே உருவான தந்தையாகிய இறைவன்**

"உங்களில் பாவநிலையில் உள்ள ஆன்மாக்களிலோ அல்லது திருமறையின் சத்தியங்களை அறியாதவர்களின் ஆன்மாக்களிலோ என்னால் நுழைய முடியாது. எனினும், நான் உங்களுக்கு எப்போதும் அருகாமையிலேயே இருக்கிறேன். ஏனெனில் எனது நன்மைத்தனத்தால் கிடைக்கின்ற அருளையும் ஆசீரையும் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆம், நான் உங்களது அருகிலிருந்து, உங்களை அழைதது் கொண்டே இருப்பேன். என்றாவது ஒரு நாள், நீங்கள் ஒளி பெற்று, உங்களின் பாவ நிலையினின்று மீண்டு வருவீர்கள் என நம்புகிறேன்.

ஆன்மாக்கள் நித்திய பேரின்ப விண்ணக வாழ்வை பெற்றிட வேண்டுமென பல வருடங்களாக அவர்களுக்கு அருகாமையிலேயே இருந்து வருகிறேன். ஒவ்வொரு நொடிப் பொழுதும் அழைத்துக்கொண்டு அவர்களுக்காகவே காத்துக் கொண்டிருக்கிறேன். ஒருநாளும் உங்களை விட்டு விலகுவதில்லை. ஒரு நாள் நிச்சயமாக நீங்கள் அப்பா பிதாவாகிய என்னிடம் வருவீர்கள். நீங்கள் மரணம் அடையும் முன் ஒரு துளி அன்பையாவது எனக்கு காட்டுவீர்கள் என்று நான் காத்திருக்கிறேன்".

**கடவுள் என் தந்தை**

என் விண்ணகத் தந்தையே, நீர் என்னுடைய தந்தை என்பதையும், நான் உம்முடைய பிள்ளை என்பதையும் அறிவது எத்துனை இனிமையானது. எனது ஆன்மீக வானில் இருள் சூழ்ந்திருக்கும்போதும், எனது சிலுவையின் பாரம் என்னை அழுத்தும் போதும், தந்தையே, நீர் என் மீது கொண்டுள்ள அன்பை விசுவசிக்கிறேன் என்று அடிக்கடி சொல்வதின் தேவையை நான் உணர்கிறேன். ஆம் தந்தாய், எனது வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நீர் எனக்கு தந்தையாய் இருக்கிறீர், நான் உமக்கு பிள்ளையாக இருக்கிறேன் என்பதை நான் விசுவசிக்கிறேன். நீர் எல்லையற்ற அன்பினால் என்னை நேசிக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். இரவு பகலாய் என்னை நீர் காத்து வருகிறீர், உமது ஆணையின்றி என் தலையிலிருந்து ஒரு முடி கூட விழுவதில்லை என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஞானத்தால், எனக்கு நன்மையானது எதுவென என்னைவிட மேலாகவே நீர் அறிந்திருக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஆற்றலால் எனக்கு நேரும் தீமையைக்கூட நன்மையாக மாற்ற வல்லவர் என்று விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற நன்மைத்தனத்தால், உம்மை அன்பு

செய்பவருக்கு அனைத்தையும் நன்மையாகவே மாற்றுகிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். என்னைத் தாக்க வரும் கரங்களில் கூட உமது குணமளிக்கும் கரங்களையே காண்கிறேன், முத்தி செய்கிறேன். நான் உம்மை விசுவசிக்கிறேன். என் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் அதிகப்படுத்தியருளும்.

எனது வாழ்வின் எல்லா நிகழ்வுகளையும் உமது அன்பே வழிநடத்துகிறது என்பதை நான் கண்டுணரச் செய்யும். தன் தாயின் கரங்களில் தன்னை முழுவதும் அர்ப்பணிக்கும் ஒரு குழந்தை போல என்னை முழுவதும் உம்மிடம் அர்ப்பணிக்க எனக்கு கற்பித்தருளும். தந்தையே! நீர் அனைத்தையும் அறிகிறீர், அனைத்தையும் காண்கிறீர். நான் என்னை அறிவதை விட நீர் என்னை நன்றாக அறிந்துள்ளீர். நீர் அனைத்தையும் செய்யும் ஆற்றல் கொண்டு என்னை அன்பு செய்கிறீர். தந்தையே, நான் எப்போதும் உம்மையே நாடி வரவேண்டுமென நீர் விரும்புவதால், நம்பிக்கையுடன் உம் திருமகன் இயேசுவோடும், அன்னை மரியாளோடும் உம்மை நாடி வந்து உம்மிடம் நான் கேட்கும் மன்றாட்டு என்னவென்றால். (உங்கள் தனிப்பட்ட மன்றாட்டை இங்கு கூறவும்). இம்மன்றாட்டை இயேசுவின் திருஇருதயத்தோடும், மரியாளின் மாசற்ற இதயத்தோடும் இணைத்து என்னையும், என் செபங்களையும், தியாகச்செயல்களையும், துன்பங்களையும், கடமையுணர்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். தூய ஆவியின் ஒளியையும், அருளையும், ஆற்றலையும் எனக்குத் தாரும். உமது பரிசுத்த ஆவியால் என்னை உறுதிப்படுத்தியருளும். அதனால் நான் அவரை ஒருபோதும் இழக்காதிருக்கவும், அவரை மனம் நோகச் செய்யாதிருக்கவும், அவரை என்னில் வலுவிழக்கச் செய்யாதிருக்கவும், வரம் தந்தருளுமாறு உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நான் மன்றாடுகிறேன். ஆண்டவராகிய இயேசுவே, உம் இதயத்தை திறந்து அதில் என் இதயத்தை வைத்து, மரியாளின் மாசற்ற இதயத்தோடு அதை இறைத்தந்தைக்கு அர்ப்பணித்தருளும். எனக்குத் தேவையான அருளைப் பெற்றுத்தாரும். வானகத் தந்தையே, எல்லா மனிதரையும் உம்மிடம் அழைத்துக் கொள்ளும். உமது தந்தைக்குரிய இரக்கத்தையும், தெய்வீக கருணையையும், உலகமெல்லாம் அறிக்கையிட செய்தருளும்.

என் மீது கனிவுள்ள ஒரு தந்தையாய் நான் செல்லுமிடமெல்லாம் கண்ணின் மணி போல என்னை காத்தருளும். என்னை உமக்கு உகந்த மகனாக / மகளாக மாற்றியருளும். என் மீது இரக்கம் வையும். தந்தையே இறைவா, எங்கள்

ஆன்மாக்களின் இனிமையான நம்பிக்கையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச் செய்தருளும். தந்தையே இறைவா, மக்களினத்தார் மீது பொழியப்படும் அளவற்ற நன்மையின் வடிவமே. மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். தந்தையே இறைவா, மனுக்குலத்தின் மீது பெய்யும் கருணை மழையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். ஆமென்.

**விவிலிய வாசகம்**
**லூக்கா 15:11–32**

மேலும் இயேசு கூறியது: “ஒருவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களுள் இளையவர் தந்தையை நோக்கி, “ அப்பா, சொத்தில் எனக்கு உரிய பங்கைத் தாரும்” என்றார். அவர் சொத்தை அவர்களுக்குப் பகிர்ந்து அளித்தார். சில நாள்களுக்குள் இளைய மகன் எல்லாவற்றையும் திரட்டிக் கொண்டு, தொலை நாட்டிற்கு நெடும் பயணம் மேற்கொண்டார்; அங்குத் தாறுமாறாக வாழ்ந்து தம் சொத்தையும் பாழாக்கினார். அனைத்தையும் அவர் செலவழித்தார். பின்பு அந்த நாடு முழுவதும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் வறுமையில் வாடினார். எனவே அந்நாட்டுக் குடிமக்களுள் ஒருவரிடம் அண்டிப் பிழைக்கச் சென்றார். அவர் அவரைப் பன்றி மேய்க்கத் தம் வயல்களுக்கு அனுப்பினார். அவர் பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தம் வயிற்றை நிரப்ப விரும்பினார். ஆனால் அதைக்கூட அவருக்குக் கொடுப்பார் இல்லை. அவர் அறிவு தெளிந்தவராய், “என் தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்குப் பசியால் சாகிறேனே!

நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், “அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்; இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்; உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன்” என்று சொல்லிக் கொண்டார். “உடனே அவர் புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தார். தொலையில் வந்து கொண்டிருந்தபோதே அவர் தந்தை அவரைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார். மகனோ அவரிடம், “அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்; இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்” என்றார். தந்தை தம் பணியாளரை

நோக்கி, "முதல்தரமான ஆடையைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள்; இவனுடைய கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள்; கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள்; நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம்.

ஏனெனில் என் மகன் இவன் இறந்துபோயிருந்தான்; மீண்டும் உயிர் பெற்று வந்துள்ளான். காணாமற்போயிருந்தான்; மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார். அவர்கள் மகிழ்ந்து விருந்து கொண்டாடத் தொடங்கினார்கள்.

"அப்போது மூத்த மகன் வயலில் இருந்தார். அவர் திரும்பி வீட்டை நெருங்கி வந்துகொண்டிருந்தபோது, ஆடல் பாடல்களைக் கேட்டு, ஊழியர்களுள் ஒருவரை வரவழைத்து, "இதெல்லாம் என்ன?" என்று வினவினார். அதற்கு ஊழியர் அவரிடம், "உம் தம்பி வந்திருக்கிறார். அவர் தம்மிடம் நலமாகத் திரும்பி வந்திருப்பதால் உம் தந்தை கொழுத்த கன்றை அடித்திருக்கிறார்" என்றார். அவர் சினமுற்று உள்ளே போக விருப்பம் இல்லாதிருந்தார். உடனே அவருடைய தந்தை வெளியே வந்து, அவரை உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்டார். அதற்கு அவர் தந்தையிடம், "பாரும், இத்தனை ஆண்டுகளாக நான் அடிமைபோன்று உமக்கு வேலை செய்துவருகிறேன். உம் கட்டளைகளை ஒருபோதும் மீறியதில்லை. ஆயினும், என் நண்பரோடு நான் மகிழ்ந்து கொண்டாட ஓர் ஆட்டுக்குட்டியைக் கூட என்றுமே நீர் தந்ததில்லை. ஆனால் விலைமகளிரோடு சேர்ந்து உம் சொத்துக்களையெல்லாம் அழித்துவிட்ட இந்த உம் மகன் திரும்பி வந்தவுடனே, இவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கிறீரே!" என்றார்.

அதற்குத் தந்தை, "மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய்; என்னுடையதெல்லாம் உன்னுடையதே. இப்போது நாம் மகிழ்ந்துகொண்டாடி இன்புற வேண்டும். ஏனெனில் உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான்; மீண்டும் உயிர்பெற்றுள்ளான். காணாமற்போயிருந்தான்; மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார்.

**ஆறாம் நாளுக்கு உரிய செபம்**

இறைத் தந்தையின் எல்லையற்ற இரக்கத்தையும் அளவற்ற கருணையையும் போற்றிப் புகழ எப்போதும் நாம் மறத்தல் ஆகாது. அவரது இரக்கம் நிறைந்த இதயத்திலிருந்து, சுரக்கும் அவரது அளவற்ற அன்பு, பெரும் நீர்வீழ்ச்சி போல் ஓடி வந்து, பெரு வெள்ளம் போல், பாவிகளாகிய நம் ஆன்மாக்களை நிரப்புகிறது. ஓ பேரிரக்கமுள்ள தந்தையே, ஆற்றல் அனைத்தும் கொண்டவரே, மகிமையின் தேவனே, பாவிகளாகிய எங்களைக் கருணையுடன் கண்நோக்கிப் பாரும். உமது

அளவற்றஇரக்கத்தை நம்பி, உம்மை அண்டி வருகிறோம். நித்தியபிதாவே, கனிவுள்ள இறைவா, அடிக்கடி, பல முறை எம் பாவங்களால் உம் அன்பு இதயத்தைக் காயப்படுத்தி, உம்மை மனம் நோகச் செய்துள்ளோம். அவற்றிற்கெல்லாம் மிகுந்த மனவருத்தத்துடன் இப்போது உம் திருமுன் மண்டியிட்டு மன்னிப்புக் கோருகிறோம். விண்ணகத் தந்தையே இறைவா, எமது அனைத்து பாவங்களையும் கனிவுடன் மன்னித்தருளுமாறு உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம். உமது கனிவாக திருமுகத்தை எமக்கு காட்டியருளும். வானத்து விண்மீன்களைப் போல், எங்கள் பாவங்கள் எண்ணிலடங்காது பெருகியுள்ளன. எம் ஆன்மாக்கள், எங்கள் கொடிய பாவங்களால் மிகவும் காயப்பட்டு, கறைபடிந்துள்ளன. இருப்பினும் உமது இரக்கத்தையும், மன்னிப்பையும் வேண்டி நிற்கிறோம். நித்திய பிதாவே, எம் பாவங்களை மன்னித்தருளும். இப்போதும், குறிப்பாக எங்கள் மரண வேளையிலும் எங்கள்மேல் இரக்கமாயிரும்.

– ஆமென்.

**நன்றி செபம்**

இரக்கமே உருவான எம் விண்ணகத் தந்தையே இறைவா, நன்றி கூறி உம்மைத் துதித்துப் போற்றி, செபத்தில் உம்மோடு நேரம் செலவிடும் இந்த வாய்ப்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிடைத்தற்கரிய எம் வாழ்வினை கொடையாகத் தந்ததை நினைத்து நன்றி கூறுகிறோம். எமது குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் உமது அன்பையும், இரக்கத்தையும் தொடர்ந்து பிரதிபலிக்கும் அனைத்து மக்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். எம் ஒவ்வொருவரையும் அளவற்ற விதத்தில் அன்பு செய்யும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். தந்தையே இறைவா, உமது அன்புதான் எமது நம்பிக்கை. உமது நிறைவான அன்புதான், தீயோனாகிய சாத்தானின் கொடிய துன்பங்களிலிருந்து எம்மை காப்பாற்றுகிறது. எம்மில் ஏராளமானோரின் இதயங்களை உமது அளவற்ற இரக்கத்தால் தொட்டு மகிழ்ச்சியில் மனம் நெகிழச் செய்கின்றீர் என்பதை உணர்ந்து உமக்கு நன்றி கூறுகிறோம். வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு உலகத்தின் கொடூரமாக பாவ சார்புள்ள தாக்குதல்களினால் இறுகிப்போன எமது கடின இதயங்களை மாற்றி, உம்மீது கொண்டுள்ள அன்பினால் பற்றி எரியச் செய்வதற்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். அன்பிற்கினிய நல்ல தந்தையே இறைவா! எம் ஒவ்வொருவர் மீதும் நீர் காட்டும் கனிவான அன்பை நினைத்து உமக்கு நன்றி கூறுகிறோம்.

அன்பான எம் தந்தையே இறைவா, கனிவோடு எம்மைப் பாதுகாத்தருளும். உமது பாதுகாப்பான அன்புக் கரங்களுக்குள் எம்மை வைத்து, நாங்கள் உமது கரங்களில் பாதுகாப்பை உணரச் செய்யும். எங்களின் அன்பான இனிய தந்தையே, எங்கள் செபங்களையும், விண்ணப்பங்களையும் தயவுடன் கேட்டு அருள் புரிந்து, எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவதற்காக உமக்கு மீண்டும் நன்றி கூறுகிறோம். நாங்கள் உம்மை எப்பொழுதும், துதித்து புகழ்ந்து நன்றி கூறுவதிலிருந்து மனம் மாற விடாதேயும், எப்பொழும் உமது அன்பு நாங்கள் எங்கு சென்றாலும் எம்மைத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது என்பதையும், எங்கள் துன்ப வேளைகளில் உமது அன்பு எப்போது ஆறுதலாய் இருக்கிறதென்றம் உணரச் செய்தருளும்.

என் அன்பான தந்தையே, படைப்பின் தேவனே, உம்மைப் புகழ்கின்றோம். உம்மை ஆராதித்து துதிக்கிறோம். உம்மை அன்பு செய்கிறோம். உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

இரக்கத்தின் ஆண்டவராகிய இயேசுவே, விண்ணகத் தந்தையின் ஒரே திருமகனே, உம்மைப் போற்றுகிறோம். உம்மைப் புகழ்கின்றோம், உம்மை துதித்து ஆராதிக்கின்றோம். உமக்கு நன்றி கூறுகின்றோம். உம்மை முழு மனதோடு அன்பு செய்கிறோம்.

எம்மை அர்ச்சித்து புனிதப்படுத்திவழி நடத்துபவரான தூய ஆவியானவரே, உம்மைப் போற்றுகிறோம், புகழ்க்ன்றோம், வாழ்த்துகின்றோம். உம்மை ஆராதிக்கின்றோம், உம்மை அன்பு செய்து நன்றி செலுத்துகின்றோம்.

மாசற்ற கன்னி மரியே, இயேசு கிறிஸ்துவின் அன்பு அன்னையே, எங்கள் ஒவ்வொருவரின் நல்வாழ்வுக்காக பரிந்து பேசும் அன்பு அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

இறைவனின் அனைத்து புனிதர்களே, வானதூதர்களே எமக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

– ஆமென்.

## ஏழாம் நாள்

## நம்மை பாதுகாக்கும் இறைவன்

**கர்த்தர் கற்பித்த செபம்**

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள்அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும், எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து
எங்களை விடுவித்தருளும். ஆமென்.

**தந்தையாம் கடவுளுக்கு அர்ப்பண செபம்**

விண்ணுலகத்தில் இருக்கிற எங்கள் அன்பு பிதாவே, உம்மிடம் வந்து, இன்று எங்களையே உமது அன்புக் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். எங்கள் மனம், உள்ளம், விருப்பங்கள் மற்றும் வாழ்க்கை அனைத்தையும் முழுமையாக உமக்கே அர்ப்பணிக்கிறோம். எங்களை உம்முடைய திருவுளப்படியே நடத்தும். மனுக்குலம் முழுவதும் உம்மை அறியவும், ஆராதிக்கவும், அன்பு செய்யவும் கருவிகளாய் எங்களை பயன்படுத்தும். உமது எல்லையற்ற அன்பை எங்கள் செயல்கள் பறைச்சாற்றட்டும். எங்கள் நாவு உமது புகழ் பாடட்டும். எங்கள் எண்ணங்கள் உம்மால் மட்டுமே தூண்டப்படட்டும். எங்கள் அன்பு பிதாவே, நாங்கள் உம்மை போற்றுகிறோம், வணங்குகிறோம், ஆராதிக்கிறோம், அன்பு செய்கிறோம். ஆமென்.

**அப்பா பிதாவின் பாதுகாப்பு வளையம் செபம்**

அப்பா பிதாவே! பாவிகளாயிருக்கிற எங்கள் மேல் இரக்கமாயிரும். நடுத்தீர்வையின் நாளில் எங்களைக் காத்தருளும். உமது பாதுகாப்பில் எம்மை வைத்தருளும். உமது பாதுகாப்பு வளையத்தினால் சூழ்ந்து எம்மைக் காத்தருளும். (முகம் குப்புற விழுந்து மும்முறை சொல்லவும்)

**நம்மை பாதுகாக்கும் இறைவன்**

“இளையோரை ஒரு கனிவான தகப்பனைப் போல பாதுகாக்க விரும்புகிறேன்.உலகில் எங்கும் தீமைகள் நிறைந்திருக்கின்றன. ஒன்றுமறியா இளம் பருவத்தினர் இவ்வுலகின் மாயக்கவர்ச்சிகளால் கவர்ந்திழுக்கப்பட்டு தங்கள் வாழ்வைப் பாழ்படுத்திக் கொள்கின்றனர்.

இளையோரே ! தீமைகளிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளவும், உங்கள் வாழ்க்கையைப் பாதுகாக்கவும் என்னிடம் வாருங்கள். உலகில் உள்ள எந்த படைப்பினையும் விட, உங்களை அதிகமாக நேசிக்கும் தந்தை நானே. என்னிடம் அடைக்கலம் புகுந்து, உங்கள் எண்ணங்களையும், விருப்பங்களையும் அர்ப்பணியுங்கள்”.

**கடவுள் என் தந்தை**

என் விண்ணகத் தந்தையே, நீர் என்னுடைய தந்தை என்பதையும், நான் உம்முடைய பிள்ளை என்பதையும் அறிவது எத்துனை இனிமையானது. எனது ஆன்மீக வானில் இருள் சூழ்ந்திருக்கும்போதும், எனது சிலுவையின் பாரம் என்னை அழுத்தும் போதும், தந்தையே, நீர் என் மீது கொண்டுள்ள அன்பை விசுவசிக்கிறேன் என்று அடிக்கடி சொல்வதின் தேவையை நான் உணர்கிறேன். ஆம் தந்தாய், எனது வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நீர் எனக்கு தந்தையாய் இருக்கிறீர், நான் உமக்கு பிள்ளையாக இருக்கிறேன் என்பதை நான் விசுவசிக்கிறேன். நீர் எல்லையற்ற அன்பினால் என்னை நேசிக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். இரவு பகலாய் என்னை நீர் காத்து வருகிறீர், உமது ஆணையின்றி என் தலையிலிருந்து ஒரு முடி கூட விழுவதில்லை என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஞானத்தால், எனக்கு நன்மையானது எதுவென என்னைவிட மேலாகவே நீர் அறிந்திருக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஆற்றலால் எனக்கு நேரும் தீமையைக்கூட நன்மையாக மாற்ற வல்லவர் என்று விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற நன்மைத்தனத்தால், உம்மை அன்பு செய்பவருக்கு அனைத்தையும் நன்மையாகவே மாற்றுகிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். என்னைத் தாக்க வரும் கரங்களில் கூட உமது குணமளிக்கும் கரங்களையே காண்கிறேன், முத்தி செய்கிறேன். நான் உம்மை விசுவசிக்கிறேன். என் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் அதிகப்படுத்தியருளும்.

எனது வாழ்வின் எல்லா நிகழ்வுகளையும் உமது அன்பே வழிநடத்துகிறது என்பதை நான் கண்டுணரச் செய்யும். தன் தாயின் கரங்களில் தன்னை முழுவதும்

அர்ப்பணிக்கும் ஒரு குழந்தை போல என்னை முழுவதும் உம்மிடம் அர்ப்பணிக்க எனக்கு கற்பித்தருளும். தந்தையே! நீர் அனைத்தையும் அறிகிறீர், அனைத்தையும் காண்கிறீர். நான் என்னை அறிவதை விட நீர் என்னை நன்றாக அறிந்துள்ளீர். நீர் அனைத்தையும் செய்யும் ஆற்றல் கொண்டு என்னை அன்பு செய்கிறீர். தந்தையே, நான் எப்போதும் உம்மையே நாடி வரவேண்டுமென நீர் விரும்புவதால், நம்பிக்கையுடன் உம் திருமகன் இயேசுவோடும், அன்னை மரியாளோடும் உம்மை நாடி வந்து உம்மிடம் நான் கேட்கும் மன்றாட்டு என்னவென்றால். (உங்கள் தனிப்பட்ட மன்றாட்டை இங்கு கூறவும்). இம்மன்றாட்டை இயேசுவின் திருஇருதயத்தோடும், மரியாளின் மாசற்ற இதயத்தோடும் இணைத்து என்னையும், என் செபங்களையும், தியாகச்செயல்களையும், துன்பங்களையும், கடமையுணர்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். தூய ஆவியின் ஒளியையும், அருளையும், ஆற்றலையும் எனக்குத் தாரும். உமது பரிசுத்த ஆவியால் என்னை உறுதிப்படுத்தியருளும். அதனால் நான் அவரை ஒருபோதும் இழக்காதிருக்கவும், அவரை மனம் நோகச் செய்யாதிருக்கவும், அவரை என்னில் வலுவிழக்கச் செய்யாதிருக்கவும், வரம் தந்தருளுமாறு உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நான் மன்றாடுகிறேன். ஆண்டவராகிய இயேசுவே, உம் இதயத்தை திறந்து அதில் என் இதயத்தை வைத்து, மரியாளின் மாசற்ற இதயத்தோடு அதை இறைத்தந்தைக்கு அர்ப்பணித்தருளும். எனக்குத் தேவையான அருளைப் பெற்றுத்தாரும். வானகத் தந்தையே, எல்லா மனிதரையும் உம்மிடம் அழைத்துக் கொள்ளும். உமது தந்தைக்குரிய இரக்கத்தையும், தெய்வீக கருணையையும், உலகமெல்லாம் அறிக்கையிட செய்தருளும்.

என் மீது கனிவுள்ள ஒரு தந்தையாய் நான் செல்லுமிடமெல்லாம் கண்ணின் மணி போல என்னை காத்தருளும். என்னை உமக்கு உகந்த மகனாக / மகளாக மாற்றியருளும். என் மீது இரக்கம் வையும். தந்தையே இறைவா, எங்கள் ஆன்மாக்களின் இனிமையான நம்பிக்கையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச் செய்தருளும். தந்தையே இறைவா, மக்களினத்தார் மீது பொழியப்படும் அளவற்ற நன்மையின் வடிவமே. மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். தந்தையே இறைவா, மனுக்குலத்தின் மீது பெய்யும் கருணை மழையே, மாந்தர்

அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். ஆமென்.

**விவிலிய வாசகம்**
**திருப்பாடல்கள் 91:1–16**

உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர், எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர். ஆண்டவரை நோக்கி, "நீரே என் புகலிடம்; என் அரண்; நான் நம்பியிருக்கும் இறைவன்" என்று உரைப்பார். ஏனெனில், ஆண்டவர் உம்மை வேடரின் கண்ணியினின்றும் கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார்.

அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார்; அவர்தம் இறக்கைகளின் கீழ் நீர் புகலிடம் காண்பீர்; அவரது உண்மையே கேடயமும் கவசமும் ஆகும். இரவின் திகிலுக்கும் பகலில் பாய்ந்துவரும் அம்புக்கும் நீர் அஞ்சமாட்டீர். இருளில் உலவும் கொள்ளை நோக்கும் நண்பகலில் தாக்கும் கொடிய வாதைக்கும் நீர் அஞ்சமாட்டீர். உம் பக்கம் ஆயிரம் பேர் வீழ்ந்தாலும், உம் வலப்புறம் பதினாயிரம் பேர் தாக்கினாலும், எதுவும் உம்மை அணுகாது. பொல்லார்க்குக் கிடைக்கும் தண்டனையை நீரே பார்ப்பீர்; உம் கண்ணாலேயே நீர் காண்பீர். ஆண்டவரை உம் புகலிடமாய்க் கொண்டீர்; உன்னதரை உம் உறைவிடமாக்கிக் கொண்டீர். ஆகவே, தீங்கு உமக்கு நேரிடாது; வாதை உம் கூடாரத்தை நெருங்காது. நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி, தம் தூதர்க்கு அவர் கட்டளையிடுவார். உம் கால் கல்லின் மேல் மோதாதபடி, அவர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக்கொள்வர்.

சிங்கத்தின்மீதும் பாம்பின்மீதும் நீர் நடந்து செல்வீர்; இளஞ்சிங்கத்தின் மீதும் விரியன்பாம்பின் மீதும் நீர் மிதித்துச் செல்வீர். 'அவர்கள் என்மீது அன்புகூர்ந்ததால், அவர்களை விடுவிப்பேன்; அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால், அவர்களைப் பாதுகாப்பேன். அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது, அவர்களுக்குப் பதிலளிப்பேன்; அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன்; அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன். நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன்; என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்.

**ஏழாம் நாளுக்குரிய செபம்**

அன்பான ஆண்டவரே! நீர் மட்டுமே எனது ஆற்றல், எனது அடைக்கலம், எனது ஆறுதல், எனது நம்பிக்கை. எனது பகைவர்கள் என்னைச் சூழ்ந்திருக்கின்றனர்.

உம்மைத் தவிர எனக்கு ஆதரவு யாருமில்லை. நீர் என்னைக் கைவிடமாட்டீர் என்று எனக்குத் தெரியும். உமது பிரசன்னம் ஒரு ஒளிக்கீற்றைப் போல அல்லாமல், ஒரு ஒளி வெள்ளத்தைப் போல என் ஆன்மாவில் உள்ள இருளை அகற்றுகிறது. இருள் சூழ்ந்த நேரங்களில் நீர் என் மிக அருகாமையில் இருக்கின்றீர். நீர் என்னை விட்டு விலகுவதில்லை. என் எதிரிகள் என்னை வெற்றிக் கொள்ள விடமாட்டீர். மன அமைதியை எனக்களித்து எதிர்கொள்ளும் சோதனைகளை அன்புடன் ஏற்றுக்கொள்ள அருள்புரியும். வெறுப்புணர்வும், கசப்புணர்வும் என்னை ஆட்கொள்ளாதிருக்க அருள்புரியும். இச்சோதனைகள் என்னை மேன்மைப்படுத்தட்டும். விண்ணகத் தந்தையே, என்னையே உம்மிடம் கையளிக்கிறேன். உமது சித்தம் என்றும் நிறைவேறட்டும். ஆமென்.

**நன்றி செபம்**

இரக்கமே உருவான எம் விண்ணகத் தந்தையே இறைவா, நன்றி கூறி உம்மைத் துதித்துப் போற்றி, செபத்தில் உம்மோடு நேரம் செலவிடும் இந்த வாய்ப்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிடைத்தற்கரிய எம் வாழ்வினை கொடையாகத் தந்ததை நினைத்து நன்றி கூறுகிறோம். எமது குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் உமது அன்பையும், இரக்கத்தையும் தொடர்ந்து பிரதிபலிக்கும் அனைத்து மக்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். எம் ஒவ்வொருவரையும் அளவற்ற விதத்தில் அன்பு செய்யும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். தந்தையே இறைவா, உமது அன்புதான் எமது நம்பிக்கை. உமது நிறைவான அன்புதான், தீயோனாகிய சாத்தானின் கொடிய துன்பங்களிலிருந்து எம்மை காப்பாற்றுகிறது. எம்மில் ஏராளமானோரின் இதயங்களை உமது அளவற்ற இரக்கத்தால் தொட்டு மகிழ்ச்சியில் மனம் நெகிழச் செய்கின்றீர் என்பதை உணர்ந்து உமக்கு நன்றி கூறுகிறோம். வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு உலகத்தின் கொடூரமாக பாவ சார்புள்ள தாக்குதல்களினால் இறுகிப்போன எமது கடின இதயங்களை மாற்றி, உம்மீது கொண்டுள்ள அன்பினால் பற்றி எரியச் செய்வதற்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். அன்பிற்கினிய நல்ல தந்தையே இறைவா! எம் ஒவ்வொருவர் மீதும் நீர் காட்டும் கனிவான அன்பை நினைத்து உமக்கு நன்றி கூறுகிறோம்.

அன்பான எம் தந்தையே இறைவா, கனிவோடு எம்மைப் பாதுகாத்தருளும். உமது பாதுகாப்பான அன்புக் கரங்களுக்குள் எம்மை வைத்து, நாங்கள் உமது கரங்களில்

பாதுகாப்பை உணரச் செய்யும். எங்களின் அன்பான இனிய தந்தையே, எங்கள் செபங்களையும், விண்ணப்பங்களையும் தயவுடன் கேட்டு அருள் புரிந்து, எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவதற்காக உமக்கு மீண்டும் நன்றி கூறுகிறோம். நாங்கள் உம்மை எப்பொழுதும், துதித்து புகழ்ந்து நன்றி கூறுவதிலிருந்து மனம் மாற விடாதேயும், எப்பொழும் உமது அன்பு நாங்கள் எங்கு சென்றாலும் எம்மைத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது என்பதையும், எங்கள் துன்ப வேளைகளில் உமது அன்பு எப்போது ஆறுதலாய் இருக்கிறதென்றம் உணரச் செய்தருளும்.

என் அன்பான தந்தையே, படைப்பின் தேவனே, உம்மைப் புகழ்கின்றோம். உம்மை ஆராதித்து துதிக்கிறோம். உம்மை அன்பு செய்கிறோம். உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

இரக்கத்தின் ஆண்டவராகிய இயேசுவே, விண்ணகத் தந்தையின் ஒரே திருமகனே, உம்மைப் போற்றுகிறோம். உம்மைப் புகழ்கின்றோம், உம்மை துதித்து ஆராதிக்கின்றோம். உமக்கு நன்றி கூறுகின்றோம். உம்மை முழு மனதோடு அன்பு செய்கிறோம்.

எம்மை அர்ச்சித்து புனிதப்படுத்திவழி நடத்துபவரான தூய ஆவியானவரே, உம்மைப் போற்றுகிறோம், புகழ்க்ன்றோம், வாழ்த்துகின்றோம். உம்மை ஆராதிக்கின்றோம், உம்மை அன்பு செய்து நன்றி செலுத்துகின்றோம்.

மாசற்ற கன்னி மரியே, இயேசு கிறிஸ்துவின் அன்பு அன்னையே, எங்கள் ஒவ்வொருவரின் நல்வாழ்வுக்காக பரிந்து பேசும் அன்பு அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

இறைவனின் அனைத்து புனிதர்களே, வானதூதர்களே எமக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

– ஆமென்.

## எட்டாம் நாள்

## நமக்கு ஆறுதலளிக்கும் இறைவன்

**கர்த்தர் கற்பித்த செபம்**

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள்அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும், எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து
எங்களை விடுவித்தருளும். ஆமென்.

**தந்தையாம் கடவுளுக்கு அர்ப்பண செபம்**

விண்ணுலகத்தில் இருக்கிற எங்கள் அன்பு பிதாவே, உம்மிடம் வந்து, இன்று எங்களையே உமது அன்புக் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். எங்கள் மனம், உள்ளம், விருப்பங்கள் மற்றும் வாழ்க்கை அனைத்தையும் முழுமையாக உமக்கே அர்ப்பணிக்கிறோம். எங்களை உம்முடைய திருவுளப்படியே நடத்தும். மனுக்குலம் முழுவதும் உம்மை அறியவும், ஆராதிக்கவும், அன்பு செய்யவும் கருவிகளாய் எங்களை பயன்படுத்தும். உமது எல்லையற்ற அன்பை எங்கள் செயல்கள் பறைச்சாற்றட்டும். எங்கள் நாவு உமது புகழ் பாடட்டும். எங்கள் எண்ணங்கள் உம்மால் மட்டுமே தூண்டப்படட்டும். எங்கள் அன்பு பிதாவே, நாங்கள் உம்மை போற்றுகிறோம், வணங்குகிறோம், ஆராதிக்கிறோம், அன்பு செய்கிறோம். ஆமென்.

**அப்பா பிதாவின் பாதுகாப்பு வளையம் செபம்**

அப்பா பிதாவே! பாவிகளாயிருக்கிற எங்கள் மேல் இரக்கமாயிரும். நடுத்தீர்வையின் நாளில் எங்களைக் காத்தருளும். உமது பாதுகாப்பில் எம்மை வைத்தருளும். உமது பாதுகாப்பு வளையத்தினால் சூழ்ந்து எம்மைக் காத்தருளும். (முகம் குப்புற விழுந்து மும்முறை சொல்லவும்)

**நமக்கு ஆறுதலளிக்கும் இறைவன்**

“சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்கள் என்னிடம் வரட்டும். நான் அவர்களுக்கு உதவி செய்வேன். அவர்கள் சுமைகளை எளிதாக்கி, அவர்களின் கசப்பான வாழ்வை இனிமையாக்குவேன். தந்தையான எனது பரிவன்பில் திளைக்கச் செய்து, அவர்களை இன்றும், என்றும் மகிழ்விப்பேன்”.

**கடவுள் என் தந்தை**

என் விண்ணகத் தந்தையே, நீர் என்னுடைய தந்தை என்பதையும், நான் உம்முடைய பிள்ளை என்பதையும் அறிவது எத்துனை இனிமையானது. எனது ஆன்மீக வானில் இருள் சூழ்ந்திருக்கும்போதும், எனது சிலுவையின் பாரம் என்னை அழுத்தும் போதும், தந்தையே, நீர் என் மீது கொண்டுள்ள அன்பை விசுவசிக்கிறேன் என்று அடிக்கடி சொல்வதின் தேவையை நான் உணர்கிறேன். ஆம் தந்தாய், எனது வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நீர் எனக்கு தந்தையாய் இருக்கிறீர், நான் உமக்கு பிள்ளையாக இருக்கிறேன் என்பதை நான் விசுவசிக்கிறேன். நீர் எல்லையற்ற அன்பினால் என்னை நேசிக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். இரவு பகலாய் என்னை நீர் காத்து வருகிறீர், உமது ஆணையின்றி என் தலையிலிருந்து ஒரு முடி கூட விழுவதில்லை என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஞானத்தால், எனக்கு நன்மையானது எதுவென என்னைவிட மேலாகவே நீர் அறிந்திருக்கிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற ஆற்றலால் எனக்கு நேரும் தீமையைக்கூட நன்மையாக மாற்ற வல்லவர் என்று விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற நன்மைத்தனத்தால், உம்மை அன்பு செய்பவருக்கு அனைத்தையும் நன்மையாகவே மாற்றுகிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். என்னைத் தாக்க வரும் கரங்களில் கூட உமது குணமளிக்கும் கரங்களையே காண்கிறேன், முத்தி செய்கிறேன். நான் உம்மை விசுவசிக்கிறேன். என் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் அதிகப்படுத்தியருளும்.

எனது வாழ்வின் எல்லா நிகழ்வுகளையும் உமது அன்பே வழிநடத்துகிறது என்பதை நான் கண்டுணரச் செய்யும். தன் தாயின் கரங்களில் தன்னை முழுவதும் அர்ப்பணிக்கும் ஒரு குழந்தை போல என்னை முழுவதும் உம்மிடம் அர்ப்பணிக்க எனக்கு கற்பித்தருளும். தந்தையே! நீர் அனைத்தையும் அறிகிறீர், அனைத்தையும் காண்கிறீர். நான் என்னை அறிவதை விட நீர் என்னை நன்றாக அறிந்துள்ளீர். நீர் அனைத்தையும் செய்யும் ஆற்றல் கொண்டு என்னை அன்பு செய்கிறீர். தந்தையே, நான் எப்போதும் உம்மையே நாடி வரவேண்டுமென நீர் விரும்புவதால், நம்பிக்கையுடன் உம்

திருமகன் இயேசுவோடும், அன்னை மரியாளோடும் உம்மை நாடி வந்து உம்மிடம் நான் கேட்கும் மன்றாட்டு என்னவென்றால். (உங்கள் தனிப்பட்ட மன்றாட்டை இங்கு கூறவும்). இம்மன்றாட்டை இயேசுவின் திருஇருதயத்தோடும், மரியாளின் மாசற்ற இதயத்தோடும் இணைத்து என்னையும், என் செபங்களையும், தியாகச்செயல்களையும், துன்பங்களையும், கடமையுணர்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். தூய ஆவியின் ஒளியையும், அருளையும், ஆற்றலையும் எனக்குத் தாரும். உமது பரிசுத்த ஆவியால் என்னை உறுதிப்படுத்தியருளும். அதனால் நான் அவரை ஒருபோதும் இழக்காதிருக்கவும், அவரை மனம் நோகச் செய்யாதிருக்கவும், அவரை என்னில் வலுவிழக்கச் செய்யாதிருக்கவும், வரம் தந்தருளுமாறு உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நான் மன்றாடுகிறேன். ஆண்டவராகிய இயேசுவே, உம் இதயத்தை திறந்து அதில் என் இதயத்தை வைத்து, மரியாளின் மாசற்ற இதயத்தோடு அதை இறைத்தந்தைக்கு அர்ப்பணித்தருளும். எனக்குத் தேவையான அருளைப் பெற்றுத்தாரும். வானகத் தந்தையே, எல்லா மனிதரையும் உம்மிடம் அழைத்துக் கொள்ளும். உமது தந்தைக்குரிய இரக்கத்தையும், தெய்வீக கருணையையும், உலகமெல்லாம் அறிக்கையிட செய்தருளும்.

என் மீது கனிவுள்ள ஒரு தந்தையாய் நான் செல்லுமிடமெல்லாம் கண்ணின் மணி போல என்னை காத்தருளும். என்னை உமக்கு உகந்த மகனாக / மகளாக மாற்றியருளும். என் மீது இரக்கம் வையும். தந்தையே இறைவா, எங்கள் ஆன்மாக்களின் இனிமையான நம்பிக்கையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச் செய்தருளும். தந்தையே இறைவா, மக்களினத்தார் மீது பொழியப்படும் அளவற்ற நன்மையின் வடிவமே. மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். தந்தையே இறைவா, மனுக்குலத்தின் மீது பெய்யும் கருணை மழையே, மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி, உம்மீது அன்பு கொள்ளச்செய்தருளும். ஆமென்.

**விவிலிய வாசகம்**
**புலம்பல் 3:52–58**

காரணமின்றி என் பகைவர், பறவையை வேட்டையாடுவது போன்று, என்னை வேட்டையாடினர்! உயிரோடு என்னைக் குழியில் தள்ளி, என்மேல் கற்களை

எறிந்தார்கள்! வெள்ளம் என் தலைக்குமேல் போயிற்று! "நான் தொலைந்தேன்" என்றேன். படுகுழியினின்று ஆண்டவரே! உம் திருப்பெயரைக் கூவியழைத்தேன்.

என் குரலை நீர் கேட்டீர்; என் விம்மலுக்கும் வேண்டுதலுக்கும் உம் செவியை மூடிக்கொள்ளாதீர்! உம்மை நோக்கி நான் கூவியழைத்த நாளில், என்னை அணுகி, "அஞ்சாதே" என்றீர்! என் தலைவரே! என் பொருட்டு வாதாடினீர்! என் உயிரை மீட்டருளினீர்!

**எட்டாம் நாளுக்குரிய செபம்**

இறைவா, நீரே தனிமையுற்ற இதயங்களுக்கு நல்ல நண்பன். துயருற்ற ஆன்மாவின் ஆறுதல். என்னைக் காத்தருள எழுந்துவாரும். இந்த விரக்தியின் கடலிலிருந்து என்னை மீட்டருளும். ஆண்டவரே, நீரே எனது நம்பிக்கை, எனது ஆறுதல், என்னை ஒருநாளும் தோல்வியடைய விடமாட்டீர். என்னைவிட்டு விலகமாட்டீர். உம்மில் நம்பிக்கை வைக்கிறேன். உமது அன்பில் நம்பிக்கை வைக்கிறேன். என்னைத் தொட்டு ஆற்றுப்படுத்துகிற, குணப்படுத்துகிற உமது கரத்திற்கும், பிரசன்னத்திற்கும் நன்றி அப்பா.

– ஆமென்.

**நன்றி செபம்**

இரக்கமே உருவான எம் விண்ணகத் தந்தையே இறைவா, நன்றி கூறி உம்மைத் துதித்துப் போற்றி, செபத்தில் உம்மோடு நேரம் செலவிடும் இந்த வாய்ப்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிடைத்தற்கரிய எம் வாழ்வினை கொடையாகத் தந்ததை நினைத்து நன்றி கூறுகிறோம். எமது குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் உமது அன்பையும், இரக்கத்தையும் தொடர்ந்து பிரதிபலிக்கும் அனைத்து மக்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். எம் ஒவ்வொருவரையும் அளவற்ற விதத்தில் அன்பு செய்யும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். தந்தையே இறைவா, உமது அன்புதான் எமது நம்பிக்கை. உமது நிறைவான அன்புதான், தீயோனாகிய சாத்தானின் கொடிய துன்பங்களிலிருந்து எம்மை காப்பாற்றுகிறது. எம்மில் ஏராளமானோரின் இதயங்களை உமது அளவற்ற இரக்கத்தால் தொட்டு மகிழ்ச்சியில் மனம் நெகிழச் செய்கின்றீர் என்பதை உணர்ந்து உமக்கு நன்றி கூறுகிறோம். வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு உலகத்தின் கொடூரமாக பாவ சார்புள்ள தாக்குதல்களினால் இறுகிப்போன எமது கடின

இதயங்களை மாற்றி, உம்மீது கொண்டுள்ள அன்பினால் பற்றி எரியச் செய்வதற்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். அன்பிற்கினிய நல்ல தந்தையே இறைவா! எம் ஒவ்வொருவர் மீதும் நீர் காட்டும் கனிவான அன்பை நினைத்து உமக்கு நன்றி கூறுகிறோம்.

